# சண்டைக்காரிகள்

## ஞாநி

ஞானபாநு

29/ B,வேம்புலி அம்மன் கோவில் தெரு,
கலைஞர் கருணாநிதி நகர் (மேற்கு)
சென்னை - 600 078
தொலைபேசி : 9444024947
e-mail : gnanisankaran@gmail.com

# நூல் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூல் | : | சண்டைக்காரிகள் |
| பொருள் | : | நாடகம் |
| ஆசிரியர் | : | ஞாநி |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| முதல் பதிப்பு | : | ஜனவரி 2008 |
| பக்கம் | : | 64 |
| அளவு | : | 1/8 டெமி |
| தாள் | : | மேப்லித்தோ என்.எஸ் |
| விலை | : | ரூ. 25/- |
| வெளியீடு | : | ஞானபாநு பதிப்பகம்<br>29/B வேம்புலி அம்மன் கோவில் தெரு,<br>கலைஞர் கருணாநிதி நகர் (மேற்கு)<br>சென்னை - 600 078.<br>தொலைபேசி : 9444024947 |
| வடிவமைப்பு | : | சத்யன்-லே அவுட்<br>சென்னை-5. தொலைபேசி: 044-42663451 |
| அச்சு | : | சேகர் ஆப்செட், சென்னை - 05<br>தொலைபேசி : 28544024 |

| | | |
|---|---|---|
| Title | : | Sandaikarigal |
| Subject | : | Drama |
| Author | : | Jnani |
| Language | : | Tamil |
| Copyright | : | Author |
| First Edition | : | January 2008 |
| Size | : | 1 x 8 demy |
| Price | : | Rs. 25.00 |
| Design | : | Satyan Layout, Chennai-5. Ph: 044-42663451 |
| Printing | : | Sekhar Offset, Chennai - 5, Ph : 28544024 |
| Publisher | : | Jnanabanu Pathippagam<br>29/B, Vembuli Amman Koil Street,<br>K.K. Nagar, (West) Chennai - 78,<br>Ph : 9444024947 |

# முன்னுரை

**த**மிழக, இந்திய வரலாற்றில் பெண்களின் பங்கு, பெண்ணுரிமைக்கான விழிப்புணர்வு மலரத் தொடங்கிய விதங்கள் பற்றி மூன்று வெவ்வேறு ஊடகங்களில் படைப்புகளை உருவாக்கும் வாய்ப்பு தற்செயலாக எனக்கு அமைந்தது.

முதலில் வந்தது தூர்தர்ஷன் பொதிகைக்காக 1997-ல் இந்திய விடுதலைப் பொன் விழாவையொட்டி ஒரு தொலைக்காட்சித் தொடர் உருவாக்கும் பணி. ‘‘வேர்கள்’’ என்ற தலைப்பில் உருவாக்கிய இந்த நான்கு வாரத் தொடர் பெரும் வரவேற்பைப் பரவலாகப் பெற்றது.

அடுத்த வாய்ப்பு 1999-ல் சென்னை மகளிர் கிறித்துவக் கல்லூரியில் மாணவியர் பங்கேற்கும் நாடகம் ஒன்றை உருவாக்கும் பணி மூன்று ஆசிரியைகளும் 30 மாணவியருமாகப் பங்கேற்ற இரு மாதப் பயிற்சி முகாமில் ‘‘சண்டைக்காரிகள்’’ நாடகத்தைத் தினசரி ஒரு காட்சியாக எழுதி உருவாக்கினேன். நாடகத்தின் தலைப்பைக் கல்லூரி நிர்வாகம் ஒப்புக் கொள்ளவில்லை. மாணவியர் அதை எதிர்த்து நாடகத்தையே போட மாட்டோம் என்று போராடலாம் என்றார்கள்.

நாடகம் நடத்தப்படுவது முக்கியம் என்பதால் மாற்று வழியை உருவாக்கினோம். ‘‘பெயரில்லாத தமிழ் நாடகம்’’ என்று அறிவித்தோம். வரலாற்றில் பெயர்கள் காணப்படாத பல பெண்கள் பற்றிய நாடகமென்பதால் இந்தப் பெயரைச் சூட்டினோம். கடைசியில் நாடகம் முடிந்ததும் கல்லூரியில் இதை ‘‘சண்டைக்காரிகள்’’ என்றே பார்த்தவர்கள் எல்லோரும் சொல்லத் தொடங்கினார்கள்.

கல்லூரியில் மூன்று முறை நிகழ்த்தப்பட்டது. வெளியில் ஆண் - பெண் இருவரும் பங்கேற்கும் நாடகமாக இதை நிகழ்த்த 2007-ல் நான் மேற்கண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. காரணம் நடிப்பதற்குத் தேவைப்பட்ட

சுமார் 15 பெண்கள் கிட்டாததுதான். ஒரு காலத்தில் ஒரு பெண் கூட நடிக்கக் கிடைக்காத நிலை இருந்தது. இன்று சுமார் ஏழெட்டு பேர் இருக்கிறார்கள். ஆனால் ‘‘சண்டைக்காரிகள்’’ நாடகத்துக்குத் தேவைப்படுவதோ 15 பேர். 2008-ல் இது நிகழும் என்று நம்புகிறேன்.

இதே தீமில் நான் உருவாக்கிய மூன்றாவது படைப்பு இன்னொரு ஊடகமான பத்திரிகையிலாகும். ‘‘அவள் விகடன்’’ இதழில் ‘‘நெருப்பு மலர்கள்’’ என்ற தலைப்பில் தொடர் கட்டுரையாகப் பல்வேறு பெண் போராளிகளைப் பற்றி 2005-ல் எழுதினேன். அதை விகடன் பிரசுரம் புத்தகமாகவும் வெளியிட்டிருக்கிறது. இதே தீமில் திரைப்படம் ஒன்றை உருவாக்குவதும் வருங்காலத்தில் சாத்தியமாக வேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த மூன்று படைப்புகளிலும் சில விஷயங்கள் பொதுவாக இருந்தாலும் சில அந்தந்த படைப்புக்குரிய தனியானதாகவும் அமைந்திருக்கின்றன. இந்த மூன்றிலும் இடம் பெறாத இன்னும் பல முக்கியமான பெண் போராளிகள் உண்டு. ஒவ்வொரு படைப்பும் உருவான நேரம், இடம், சூழல் இவையே இந்த விடுபடல்களுக்குக் காரணம். தவிர இந்த விஷயத்தைப் பொறுத்தவரை, இன்னும் சொல்ல ஏராளமானவை இருந்து கொண்டேதான் இருக்கின்றன.

ஆண் - பெண் உறவை ஆரோக்கியமானதாக ஆக்குவதும், ஆண் - பெண் - இதர மனிதர்கள் அனைவரும் சமத்துவத்துடன் வாழ்வதும் நமது பெருங்கனவு. அதை நோக்கிய எண்ணற்ற முயற்சிகளில் என்னுடைய இந்தப் படைப்புகளும் அடங்கும் என்பது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

மேலும் மேலும் சண்டைக்காரிகளையும் சண்டைக்காரன் களையும் அவாவும் எல்லா மனங்களும் இந்தப் படைப்பை விரும்பும் என்ற நம்பிக்கையுடன்.

**ஞாநி**

**என் மீது அன்பு காட்டும் சில பெண்களின்**
**அன்பு மழைக்கு நடுவிலிருந்து**

**ஜனவரி 2008**

**என் வாழ்க்கையில் அளவற்ற இனிமைகளையும் ஒரு சில வலிகளையும் எனக்கு அளித்து என்னை வளப்படுத்தியிருக்கும் எல்லா பெண்களுக்கும் இந்த நூல் காணிக்கை.**

# சண்டைக்காரிகள்

**(மேடையில் ஒரு குழு பாடியபடி நடன மாடுகிறது.)**

**குழு (பாடல்)** : *சண்டைக்காரி சண்டைக் காரி சண்டைக் காரி யாருங்க? கண்டு சொல்லுங்க.*

*சண்டை போடாம சமத்துவமா நடத்தி னது யாருங்க*

*கண்டு சொல்லுங்க*

*சண்டைக்காரி சண்டைக்காரி...*

*(இன்னொரு குழு மேடைக்கு ஓடி வரு கிறது.)*

**சண்டைக் குழு** : *ஏய் ஏய் ஏய் நிறுத்து. நாடகம் போடச் சொன்னா, சண்டைக்காரி சண்டைக் காரினு இது என்ன ஒப்பாரி? அதானே இது என்ன பாட்டு?*

*(பாடி ஆடிக் கொண்டிருந்த குழு உள்ளே போய் விடுகிறது. பிறகு திரும்பி வருகிறது.)*

**குழு** : *நாங்க நாடகம்தானே போட்டு கிட்டிருக் கோம்.*

**சண்டைக் குழு** : *இதான் நாடகமா? (சிரிக்கிறார்கள்)*

**குழு** : *பின்னே வேற எப்பிடி நாடகம் போடறது? நீங்கதான் சொல்லுங்களேன்.*

**சண்டைக் குழு** : *நாங்க நாடகம் பாக்கத்தான் வந்தோம். எங்களுக்கு நாடகம் போடத் தெரியாது.*

**குழு** : அப்ப போடறதை அமைதியாப் பாத்துட்டுப் போங்க..

**சண்டைக் குழு** : அதுக்காக என்ன போட்டாலும் பாத்து கிட்டிருக்கமுடியுமா ?

**(இரு குழுக்களும் முணுமுணுப்பாக பேசிக் கொள்கிறார்கள்.)**

**ஒருத்தி** : இப்பிடி பேசிகிட்டே இருந்தா எப்பிடிப்பா? ஏதாவது முடிவுக்கு வாங்க.

**இன்னொருத்தி** : பேசாம இடைவேளை விட்டுடலாம்.

**ஒருத்தி** : இன்னும் நாடகம் ஆரம்பிக்கவே இல்லையே..

**மற்றொருத்தி** : எல்லாரும் சேர்ந்தே போடலாமே..

**சண்டைக் குழு** : எங்களையும் சேத்துக்கறீங்களா ?

**குழு** : ம்ம்..

**சண்டைக்குழு** : ஆனா, எங்களுக்கு நடிக்கத் தெரியாதே..

**குழு** : பரவாயில்லை. இவ டைரக்ட் பண்ணுவா..

**சண்டைக்குழு** : ஆங். எங்க கிட்டயும் ஒரு டைரக்டர் இருக்கா.. நீ போடி.

**ஒரு கட்டியக்காரி** : ரெண்டு பேரும் சேர்ந்தே டைரக்ட் பண்ணலாம்.

**மற்றொரு** : ஓகே. ஓகே.

**க.1** : அப்ப நீங்கள்லாம்..

**எல்லா**

**குழுவினரும்** : வெளில போகணுமா ?

**க.2** : இல்லயில்ல.. உள்ள போங்க.. நீங்கதானே நடிக்கணும்..

***(இரண்டு கட்டியக்காரிகளைத் தவிர மற்றவர் கள் எல்லாரும் உள்புறம் செல்கிறார்கள்.)***

***க.2*** : எதைப் பத்தி நாடகம் போடலாம்.

***க.1*** : பெண்களைப பத்திதான். நம்மைப் பத்தி நாமே பேசாட்டி வேற யார் பேசுவாங்க?

***க.2*** : நம்மைப் பத்தின்னா? உன்னையும் என்னையும் பத்தியா?

***க.1*** : ஆமா.

***க.2*** : வேணாம்ப்பா. பாப்புலரான பெண்களைப் பத்தி நாடகம் போட்டா இவங்கள்லாம் ஜாலியா பாப்பாங்க.

***க.1*** : யார் யார் சொல்லு..

***க.2*** : சுஷ்மிதா சென்... ஐஸ்வர்யா ராய்..

***க.1*** : அப்பறம்..?

***க.2*** : சிம்ரன்..விஜயசாந்தி...

***க.1*** : வேற ?

***க.2*** : எம்.டி.வி மலாய்கா,, பெப்சி உமா...

***க.1*** : இவங்களப் பத்திதான் எல்லாருக்கும் ஏற்கனவெ நெறைய்ய தெரியுமே. தெரியாதவங்களைப் பத்தி பேசலாமே..

***(உள்ளிருந்து நான்கைந்து பேர் வருகி றார்கள்.)***

**வந்தவர்கள்** : நீ பேசிகிட்டிருந்தவங்க பத்தி எல்லாம் எங்களுக்குத் தெரியாது..

***க.2*** : என்ன சொல்றீங்க ? ஐஸ்வர்யா ராய், சிம்ரன், மலாய்காலாம் உங்களுக்குத் தெரியாதா ?

**வந்தவர்கள்** : ம்ஹூம்.

**க.1** : உங்க வீட்டுல டி.வி இல்லியா ?

**வந்தவர்கள்** : அப்பிடின்னா என்ன ?

**க.2** : ஓ.அதான் உங்களுக்கு இவங்களைப் பத்திலாம் தெரியல..சரி. நீங்க யாரு?

**வந்தவர்கள்** : அப்ப, உங்களுக்கும் எங்களைத் தெ தெரியாதா ?

**க.2** : தெரியலியே, யாரு நீங்க ?

**வந்தவர்கள்** : பேர் சொன்னா தெரிஞ்சுடுமா ?

**க.2** : தெரியுதான்னு பாக்கலாம். பேர் சொல்லுங்க.

**வந்தவர்கள்** : எங்க எல்லாருக்கும் ஒரே பேர்தான். சண்டைக்காரின்னு சொல்லுவாங்க.

**க.2** : ஏன் அப்பிடி ?

**வந்தவர்கள்** : அது அப்பிடிதான்.

**க.2** : அதான் ஏன் அப்பிடின்னு கேக்கறேன்.

**வந்தவர்கள்** : ஏன் அப்பிடின்னு தெரிஞ்சுக்கணும்னா, எங்க ஒவ்வொருத்தரைப் பத்தியும் விவரமா சொல்லியாகணும்.

**க.2** : சரி. சொல்லுங்க கேப்போம்.

வந்தவர்கள் பாடுகிறார்கள் : சண்டைக்காரி சண்டைக்காரி சண்டைக்காரி..

**க1.** : இந்தப் பாட்டு மட்டும் வேணாமே. இவளுக்குப் பிடிக்காது.

**க.2.** : ஆமா, வேற ஏதாவது ஜாலியா ஆரம்பிங்க.

**வந்தவர்கள்** : ஜாலியான்னா...? கல்யாணப்பாட்டு பாடட்டுமா?

**க.2** : கல்யாணம் ஓ.கே.

**க.1** : கல்யாணம்னா ஜாலியா?

**க.2.** : இல்லியா பின்னே? ஒவ்வொரு பொண்ணுக்கும் கல்யாணம்தானே ஃபைனலா ஜாலியான விஷயம் ?

**க.1** : பொண்ணுங்களுக்கு கல்யாணம் தான் முக்கியம்ங்கறியா?

**க.2** : ஆமா, அதுக்கப்புறம் சுபம்தானே? சினிமால கூட லாஸ்ட் சீன் அதானே வரும்?

**க.1** : நமக்கு இப்போ அது ஃபர்ஸ்ட் சீன்ப்பா.. இவங்க பாடட்டுமே,, அப்பறம் மீதிலாம் பாத்துக்கலாம்.

**க.2** : ஓகே ஓகே.. ஆங். யாருக்குக் கல்யாணம் ?

**வந்தவர்கள்** : தேவிக்கு....

**க.2** : தேவி.. நைஸ் நேம்...

**(குழுவினர் உள்ளே பாடியபடி செல்கிறார்கள். பாடியபடியே திரும்பி வந்து மேடையை ஒரு கல்யாண வீடாக அலங்கரிக்கிறார்கள். அவர்கள் செய்வதை எல்லாம் கட்டியக்காரிகள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.)**

**(குழு ஒரு மூடிய பல்லக்கைக் கொண்டு வருகிறது. மண மேடை அருகே கொண்டு போய் நிறுத்துகிறது. பல்லக்கிலிருந்து ஒரு சிறுமி இறங்கிச் சென்று அமர்கிறாள். எல்லாரும் உறை நிலை.)**

**க.2** : எதுக்கு அந்துப் பாப்பாவைக் கொண்டு வந்து மணையில உக்கார வைக்கறாங்க ?

**க.1** : அவளுக்குதான் கல்யாணம். அவதான் தேவி.

**க.2** : என்ன விளையாடறியா ?

**க.1** : நான் ஒண்ணும் வெளையாடல. நூறு வருஷத்துக்கு முன்ன பொறந்திருந்தா நமக்குலாம் கூட இந்த வயசுல கல்யாணம் முடிஞ்சு போயிருக்கும்.

**க.2** : என்ன வயசு தேவிக்கு ?

**தேவி** : பதினொண்ணு.

குழுவினர் (உறை நிலையிலிருந்து சட் டென்று மாறி): லேட் மேரேஜ்.

**க.2** : லேட் மேரேஜா ?

**க.1** : ஆமா. எழுபது வருஷம் முன்ன ஒரு சென்சஸ் எடுத்தாங்க... அதுல வெவ ரம் இருக்கு. அப்ப அஞ்சுலருந்து பத்து வயசுக்குள்ள கல்யாணம் ஆன குழந் தைங்க மட்டும் நூத்துக்கு பத்தொன்பது பேர். பத்துலருந்து பதினஞ்சு வயசுக்குள்ள கல்யாணமான குழந்தைங்க நூத்துக்கு 38 பேர். ஒரு வயசுக்குள்ள கல்யாணம் ஆன குழந்தைங்க கூட அந்த சென்சஸ்ல இருக்கு.

**க.2** : என்ன கல்யாணம் இது? செக்சே இல் லாத கல்யாணமா இருக்கு. இந்தக் குழந்தைங்கல்லாம் பெரியவங்க ஆன தும் அப்பறம் வேற கல்யாணம் பண்ணி டுவாங்க இல்ல? இது சும்மா தமாஷுக் குதானே?

**க.1** : *இல்லையில்ல. இப்ப யாரைக் கல்யாணம் பண்ணி வெச்சிருக்கோ அவன்தான் எப்பவும் புருஷன். இந்தப் பொண்ணு பெரியவளாற வரைக்கும் இவ வீட்டிலயே இருப்பா. வயசுக்கு வந்தப்பறம், புருஷன் வீட்டுக்கு அனுப்பி வைப்பாங்க. அப்பறம் சாந்தி முகூர்த்தம்.*

**குழு** : *(உறை நிலையிலிருந்து மாறி): அதுக் குள்ள புருஷன் செத்துப் போயிருந்தாலும் போயிருக்கலாம்.*

**க.2** : *என்ன சொல்றாங்க இவங்க ?*

**க.1** : *அது வேற மேட்டர். அப்பறம் பாத்துக் கலாம்ப்பா.*

**க.2** : *சரி சரி. தேவிக்கு கல்யாணம் முடிஞ் சப்பறம் என்ன ஆச்சு ?*

**க.1** : *வா. தேவி வீட்டுக்குப் போய் பார்க்க லாம்.*

**(குழு இதற்குள் கல்யாண அலங்காரங் களை நீக்கிவிட்டு, ஒரு வீட்டுக் கூடத்தை ஊஞ்சலுடன் ஏற்பாடு செய்கிறது. ஊஞ்சலில் தேவியின் அப்பா உட்கார்ந்திருக்கிறார். அரங்கின் இன் னொரு பக்கத்தில் ஒரு விதவைப் பாட் டியும் தேவியும் உட்கார்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.)**

**தேவி** : *(பாட்டியிடம்): பாட்டி, இது சாதம். இது மீன். இது பருப்பு. பருப்பு வெந்துண் டுருக்கு.*

**பாட்டி** : *சீக்கிரமா செய்டா கண்ணு. பாட்டிக்கு பசிக்கறது. எனக்கு மீன், பருப்புலாம் சாப் பிடக் கூடாதுடா. கஞ்சி மட்டும் குடு.*

**தேவி** : ஏன் பாட்டி ?

**பாட்டி** : அது அப்பிடிதான்டா.

**(அப்போது ஊஞ்சல் பகுதியில் ஒருவர் நுழைகிறார். தேவியின் மாமனார். அந்தக் குரல் கேட்டுப் பாட்டி பார்க்கிறாள்.)**

**மாமனார்** : நமஸ்காரம்.

**தேவியின் அப்பா** : (எழுந்து வரவேற்கிறார்): நமஸ்காரம். வாங்க (உட்புறம் பார்த்து) கமலா, சம் பந்தி வந்திருக்கார்.

**பாட்டி (தேவியிடம்)** : போய் அப்பாவுக்கு நமஸ்காரம் பண்ணு.

**தேவி**

**(எட்டிபார்த்துவிட்டு)** : அது அப்பா இல்ல பாட்டி., தாத்தா..

**பாட்டி** : புருஷனோட அப்பாவையும் அப்பான்னு தான் கூப்பிடணும்.போ.

**தேவி** : நீயும் வா பாட்டி.

**பாட்டி** : நான் அங்கெல்லாம் வரக்கூடாதும்மா.

**மாமனார்** : இந்த வாரத்துலயே ஒரு நல்ல நாளா பாத்து தேவியை அங்க கொண்டு வந்து விட்டுருங்க.

**அப்பா** : கொஞ்சம் பொறுத்துக்கலாமே. அவ ருதுவானதுக்கு அப்பறமா நாள் பாத்து அனுப்பலாம்னு..

**மாமனார்** : அதனால பரவாயில்ல. இப்பவே அங்க வந்துட்டா ஹரியோட அம்மாவுக்கு ஒத்தாசையா இருக்கும். அவளுக்கும் உடம்பு முடியல. இவளும் வந்தா நாலு காரியம் செய்யக் கத்துப்பா.

**(மற்றொரு தூணின் பின்னிருந்து எட்டிப் பார்த்து தேவியின் அம்மா பேசுகிறாள்.)**

**அம்மா** : சமையல் காரியம்லாம் இப்பவே பண்ணுவா. காய் மீன்லாம் நறுக்குவா.. பூல்மணி. இங்க வா.

**(தேவி அம்மாவிடம் போகிறாள். அம்மா அவளிடம் ஒரு செம்பைக் கொடுக்கிறாள். முக்காடிட்டு விடுகிறாள். தேவி மாமனாரிடம் செம்பைத் தந்துவிட்டு நமஸ்கரிக்கிறாள். அவர் ஆசிர்வதிக்கிறார்.)**

**மாமனார்** : இன்னும் நாலு நாள்லயே நல்ல முகூர்த்தம் இருக்கு. இவளை அனுப்பிடுங்கோ.

**(எழுந்து வெளியேறுகிறார்.**

**பாட்டியிடம் தேவி விடைபெறுகிறாள்.**

**அவள் தூணிடம் வரும்போது அருகே ஒரு பாயில் மாமியார் படுத்துக் கிடக்கிறார்.)**

**மாமியார்** : தேவி, அந்தத் துண்டை எடுத்துக் குடு.

**தேவி** : இதோம்மா.

**மாமியார்** : தேவி, பாத்திரம்லாம் தேச்சாச்சா?

**தேவி** : இதோம்மா.

**மாமியார்** : அப்பாவுக்கு பால் குடுத்துட்டியா?

**தேவி** : இதோம்மா.

**மாமியார்** : கார்த்தாலைக்கு வெறகெல்லாம் எடுத்து வச்சுட்டியா ?

**தேவி** : இதோம்மா

**மாமியார்** : என்னோட மருந்தைக் கொண்டு வந்தியா ?

**தேவி** : இதோம்மா.

**மாமியார்** : ஹரி தூங்கறதுக்குள்ள அவனுக்கு பால் எடுத்துண்டு போ.

**தேவி** : இதோம்மா.

**தேவி பால் செம்புடன் ஹரி இருக்கும் அறைக்கு செல்கிறாள்.முதலில் ஊஞ்சல் இருந்த கூடம் இப்போது படுக்கை அறையாக ஒரு கட்டிலுடன் இருக்கிறது.**

(அதில் ஹரி உட்கார்ந்திருக்கிறான்.)

**ஹரி** : ஏன் இவ்வளவு நேரம் ? இங்கே வா.

(தேவி பால் செம்பைத் தருகிறாள். ஹரி ஒரு கையில் அதை வாங்கிக் கொண்டு மறு கையால் தேவியைப் பிடித்து இழுக்கிறான்.)

**தேவி** : வேண்டாம் மாமா.

**(சட்டென்று அந்தப் பகுதியில் ஒளி அணைகிறது.)**

**தேவியின்**

**குரல் மட்டும்** : "வேணாம் மாமா. பயமா இருக்கு. வேணாம் மாமா."

**(ஹரி காலி பால் செம்பைத் தூக்கி எறிகிறான். செம்பு உருண்டு வந்து விழுகிற இடத்தில் இரண்டு கட்டியக்காரிகளும் நிற்கிறார்கள்.)**

**(மறுபடியும் ஹரி அறையில் ஒளி. கட்டிலில் தேவி பிணமாகக் கிடக்கிறாள். குழு வந்து அதையே பாடையாகத் தூக்கிச் செல்கிறது. பாடை சென்று இறக்கப்படும் இடத்தில் தேவியின் அம்மா.அப்பா, பாட்டி உட்கார்ந்து அழுகிறார்கள். குழு கல்யாணப் பாட்டையே சோகமாக முணுமுணுக்கிறது.)**

**க.2** : இதெல்லாம் நெஜமா நடந்துச்சா ?

**க.1** : இந்த மாதிரி ஒண்ணு ரெண்டு இல்ல நெறைய நடந்திருக்கு.

**க.2** : யாரும் இதப் பத்தியெல்லாம் கவலப் படலியா ?

**க.1** : நெறயப் பேர் கவலைப்படல.

**க.2** : ஏன் ?

**க.1** : குழந்தையா இருக்கறப்பவே கல்யாணம் செய்யறதுதான் சரின்னு அவங்க நம்பி னாங்க.அப்பிடிதான் சாஸ்திரங்கள்ல சொல்லியிருக்காம்.

**க.2** : ஏன் அப்பிடி?

**க.1** : அது அப்பிடிதான்.

**க.2** : அதான் ஏன் அப்பிடின்னு கேக்கறேன்.

**க.1** : கொஞ்சம் பேர் அப்பிடிக் கேட்டாங்க.

**க.2** : எத்தனை பேரு?

**க.1** : ஒரு 1500 பேரு.

**க.2** : யார் கிட்ட கேட்டாங்க ?

**க.1** : விக்டோரியா மகாராணிகிட்ட. பெட்டிஷன் குடுத்தாங்க. கல்யாணம் செய்யற வயச மாத்தணும்னு.

**க.2** : அது எனக்குத் தெரியும். 21 வயசுன்னு மாத்தினாங்க இல்ல. இப்ப ஆட்டோ பின்னால எல்லாம் எழுதி வெச்சிருக்கே.. பெண்ணுக்கேற்ற திருமண வயது 21ன்னு. அதானே..

**க.1** : இல்லயில்ல.. பத்து வயசுன்னு இருந் ததை விக்டோரியா மகாராணி ஆட்சி பன்னண்டு வயசுன்னு மாத்திச்சு.

**க.2** : அவ்வளவுதானா ?

**க.1** : அதைக் கூட யாரும் மதிக்கல. பன்னண்டு வயசு சட்டம் வந்து ஏழு வருஷம் கழிச்சுதான் பாரதியாருக்குக் கல்யாணம் நடந்துது. அப்ப அவர் வயசு பன்னண்டு. அவர் மனைவி செல்லம்மாள் அப்ப ஏழு வயசுக் குழந்தை.

**க.2** : பெரியவரானப்பறம் பாரதியார் அதைப் பத்தி ஏதாவது சொல்லியிருக்காரா ?

**க.1** : பாட்டே எழுதியிருக்காரு. தாய்ப்பால் குடிக்கற குழந்தைக்கெல்லாம் கல்யாணம் பண்ணி வெக்கற ஜனங்க இன்னும் ஆயிரம் வருஷம் அடிமைகளாகவே இருந்து சாகட்டும்னு தோணுதுன்னு எழுதியிருக்கார்.

**க.2** : என்ன சொல்றே நீ ? தாய்ப்பால் குடிக்கற குழந்தைக்குக் கூடவா கல்யாணம் பண்ணிக்கிட்டிருந்தாங்க ?

**க.1** : நீ வேற. அந்த வயசுல குழந்தைங்க கல்யாணம் முடிஞ்சு புருஷன் செத்து விதவையா கூட ஆகியிருக்காங்க.

**க.2** : என்னப்பா சொல்றே நீ ? ஷாக்கிங்கா இருக்கு.

**க.1** : சரியா 88 வருஷம் முன்னால எடுத்த சென்சஸ்படி இந்த சென்னை பிரசிடென்சில மட்டும் அஞ்சு வயசுக்குள்ளயே விதவையான குழந்தைங்க 673 பேர். இதுல 31 குழந்தைகளுக்கு ஒரு வயசு கூட முடியல. அப்பறம் 1928ல ஒரு கணக்கு. முப்பது வயசுக்குக் கீழே இருந்த விதவைகள் மட்டும் நாலு லட்சம் பெண்கள். அப்ப மொத்த விதவைகள் தமிழ்நாட்டில 40 லட்சம் பேர்.

**க.2** : கல்யாணம் பண்ணவங்கள்ல பாதி பேர் விதவையா இருப்பாங்க போல்ருக்கே ?

**க.1** : கரெக்ட்.

**க.2** : இவங்கள்லாம் மறுபடியும் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே.

**குழு** : அய்யய்யோ...அப்பறம் நம்ம ஆசாரம் அனுஷ்டானம்லாம் என்ன ஆறது ? அபசாரம் அபசாரம்.

**க.2** : அப்போ இவுங்கள்லாம் என்ன செஞ் சாங்க ?

**ஒரு விதவை** : என்னைக் கேளு. நான் சொல்றேன்.

**க.2** : யார் நீ ? உன்னைப் பாா்த்தா அந்த பூல்மணி தேவியோட பாட்டி மாதிரி இருக்கே ?

**விதவை** : இருக்கும். அவளும் என்னை மாதிரி விதவைதானே. எல்லா விதவைகளும் ஒரே மாதிரிதான் இருப்பா. மொட்டையடிச்சு முக்காடு போட்டுட்டுட்டா பாரதியார் பொண்டாட்டி கூட என்னை மாதிரி தான் இருப்பா. அந்த மனுஷன் என்ன பாட்டு எழுதி என்ன பிரயோஜனம். அவர் சம்சாரத்தைக் கூட விட்டு வைக் கலியே.மேல் ஜாதில பொறந்துட்டா, எந்த ஊராயிருந்தாலும் பொம்மனாட்டிக்குக்கு இதான் கதி. எல்லா பாஷைலயும் விதவைக்கு ஒரு கெட்ட வார்த்தை உண்டு தெரியுமா உங்களுக்கு ? தமிழ்ல முண்டை, முண்டச்சின்னு திட்டுவா. ஆனா விதவைன்னு சொன்னா கௌர வமான வார்த்தை. என்ன கௌரவமோ தெரியல. விதவைன்னா தாலி அறுத்தவ. தாலி கட்டிக்கறதை விட தாலி அறுக்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமோ? இருக்கற

வரைக்கும் புருஷன்காரன் தொல்லை. அவன் செத்துட்டான்னா, சுத்தி இருக்கறவா அத்தனை பேரும் இம்சை பண்ணுவா. ரத்னாபாய் புருஷன் செத்தப்பொ,சனியன் ஒழிஞ்சுதுன்னு நெனைச்சேன்.அப்பிடி போட்டு அடிப்பான் அவன். அவன் பொணத்தைக் கீழே வெச்சப்பவே, ரத்னாவையும் கீழே தரைல தள்ளிட்டா. அவளுக்கு அப்ப காய்ச்சல். அவ மேல குடம் குடமா பச்சைத் தண்ணியை கொட்டிண்டெ இருந்தா.சாப்பிடறதுக்கு தண்ணி கூடக் கண்ல காட்டல. புருஷன் செத்த எட்டு மணி நேரத்துல அவளும் செத்துட்டா. செத்துப் போறவா கண்ணு எப்பிடி இருக்கும் தெரியுமா உங்களுக்கு ? பார்த்திருக்கேளா? நான் பாத்திருக்கேன். ரத்னா சாகறப்ப என் கண்ணையே பாத்துண்டுதான் செத்தா. நீ சும்மா இருக்கியே நீ சும்மா இருக்கியேன்னு கேட்கறாப்பல இருந்துது. ரத்னா செத்துட்டா. ஆனா கமலாபாய், ஜானா, எல்லாம் புருஷன் செத்தப்பறமும் ரொம்ப நாள் உயிரோட இருந்தா. அதாவது தெனம் தெனம் செத்துண்டே ரொம்ப வருஷம் உயிரோட இருந்தா. எல்லா விதவைகளுக்கும் சீக்கிரமா சாவு வர்றதில்ல. புருஷன்காரன் கூடவே நெருப்புல தூக்கிப் போட்டா கூட, ரெண்டு மணி நேரம், மூணு மணி நேரம் துடிச்சுதான் சாகணும். நெருப்புல போடலன்னா, ஒரு பத்து வருஷம், முப்பது வருஷம் உயிரோட செத்துண்டே இருக்கணும். கமலா புருஷன் செத்தப்ப நான் சுமங்கலியாதான் இருந்தேன். பாடைக்குப் பின்னாலயெ அவள இழுத்துண்டு வர்றா. எங்களுக்கு ஒரு இருநூறு அடி தள்ளி அவ வர்றா.

எங்க கூட சேர்ந்து வரக்கூடாதாம். சாஸ்திரம் அப்பிடி. அறுத்துட்டவ நெழல் கூட சுமங்கலி மேல படக் கூடாதாம். கொளுத்தற வெய்யில். ஆறு மணி நேரம் நடக்கறோம். நாங்கள்லாம் அங்கங்க நிந்து தண்ணி குடிக்கறோம். அவ ஒரு சொட்டுத் தண்ணி கூட குடிக்கக் கூடாதாம். தப்பித் தவறி அந்த மாதிரி விதவை எவளாவது அப்ப தண்ணி வேணும்னு கேட்டுட்டா போதும். அவ்வளவுதான். இத்தனை வருஷத்துல நீ ஒருத்திதான் தாலி அறுத்தவளா? மத்தவங்கள்லாம் இல்ல? பேசாம கெடன்னு சொல்லிடுவா. யாரும் பரிதாபப்பட்டு குடுக்கவும் மாட்டா. குடுத்தா குடுக்கறவாளுக்கு பாவம் வந்துடுமாம். ஆனா, அப்ப அவ கண்ணைப் பார்த்தேள்னா குடுக்கணும்னு உங்களுக்கே தோணும். நான் குடுத்தேன். ரகசியமா குடுத்தேன். அவ ஓன்னு அழறா. போயிடு. போயிடு. யாராவது பாத்துட்டா உன்னைத் திட்டுவா. போயிடுன்னு அழுதா. கமலாபாய், ஜானா எல்லாம் எப்பிடி கஷ்டப்பட்டான்னு எனக்கு என் ஆம்படையான் செத்தப்பதான் தெரிஞ்சுது. ரெண்டு பொம்மனாட்டி என்ன இழுத்துண்டு போறா. அவா கீழ் ஜாதிக்காரா. நான் மேல் ஜாதிதான். ஆனா புருஷன் செத்துட்டா, நானும் கீழ் ஜாதி ஆயிடறேன். என்னை அவாதான் தொடலாமாம். நகையல்லாம் கழட்டறது கூட அவாதான் செய்யணும். கழட்ட மாட்டா. அப்பிடியே பிடிச்சு காதும் மூக்கும் அறுந்து போறா மாதிரி இழுப்பா. பச்சைப்புள்ளைனு கூட பாக்க மாட்டா. கதறக் கதற அறுப்பா. ஆத்தங்கரை ஓரத்துல என் புருஷனுக்கு கொள்ளி வெச்சுட்டு, என்ன ஆத்துல

தள்ளிட்டா. அவன் பொணம் எரிஞ்சு வெந்து சாம்பலாகற வரைக்கும் நான் தண்ணிக்குள்ளயே இருக்கணுமாம். ஒரு பொணம் எரிஞ்சு சாம்பலாகறதுக்கு எவ்வளவு நேரம் ஆகும் தெரியுமா ? அப்பதான் நெனைச்சேன். நானும் போய் நெருப்புலயே விழுந்தடலாமேன்னு. வீட்டுக்குத் திரும்பி வந்ததும் ஒரு மூலை லயே கெடக்கணும். மாசா மாசம் தீட்டு வந்ததும் ஒரு மூலைலயே கெடக்கற மாதிரி, அதுவாவது ஒரு நாலு நாள். அறுத்துட்டப்பறம் எப்பவும் மூலைல கெடக்கணும். அடுத்த பத்து நாளும் யாரும் இருக்கியா, செத்தியான்னு எட்டிக் கூடப் பாக்க மாட்டா. பார்ப்பானும் பறச்சியும்தான் வந்து காசு பிடுங்கிட்டுப் போவா. பத்து, பதிமூணு சடங்குல்லாம் முடிஞ்சப்பறம், வீட்டு வேலை எல்லாம் செய்யச் சொல்லுவா. வேலைக்காரிய விட மோசம். புருஷன் செத்த ஒரு வருஷத்துக்கு ஒரு வேளைதான் சாப்பாடு. அப்பிடிதான் சாஸ்திரமாம். அப்பறமும் அப்பிடியேதான் நடத்துவா. நம்ம கைல நாலு காசு இருந்தா, அதைப் பிடுங்கிக்க, எல்லா வேலையும் செய்வாங்க. இதையெல்லாம் யார் கிட்ட போய் சொல்லி அழ முடியும். அப்பிடி அழுதா விஜயலஷ்மிக்கான கதிதான் நமக்கும்.

ஏதோ அன்பா அனுசரணையா பேசற ஒரு ஆம்பிளை கிட்ட தன் கஷ்டத்தைலாம் சொன்னா. ஆம்பளை தோள்ல சாஞ் சுண்டு அழற பொம்மனாட்டிக்கு என்ன ஆகும்? அதான் விஜயலஷ்மிக்கும் ஆச்சு. பிள்ளத்தாய்ச்சி ஆயிட்டா. ஒரு விதவை பிள்ளைத்தாய்ச்சி ஆனா வெளில சொல்ல முடியுமா? சொல்லாம இருந்தாலும்

மறைக்க முடியுமா? ஆம்பளை ரகசிய மாவும் தொடுப்பு வெச்சுப்பான். பகிரங்க மாவும் வெச்சுப்பான். யார் கேக்கப் போறா? பொம்பள அப்பிடி செய்ய முடியுமா? பாவம் விஜி. கொழந்தையக் கலச்சுட்டா. அவ்வளவுதான். விஷயம் தெரிஞ்சுப் போயி, அவ கொலை பண்ணிட்டான்னு சொல்லி, அவளுக்கு தூக்கு தண்டனை குடுத்துட்டா. இதோ இதே மாதிரி ஒரு கயறுதான். நேத்து ஒரு தண்டனை. முந்தா நாள் ஒரு தண்டனை. இப்ப இந்தக் கயறு என்னை வா வான்னு சொல்றது. இன்னும் எத்தனை பேரை இது வா வான்னு சொல்லியிருக்கு தெரியுமா ? இதோ வரேன்.

**(விதவை தூக்குக் கயிறை நோக்கி நடந்து செல்ல ஒளி மறைகிறது.)**

***க.2*** : எனக்கு நம்பவே முடியலப்பா.. இப்பிடில்லாம் ஏதோ ஒரு ஆயிரம் வருஷத்துக்கு முன்னால நடந்துருக்கும்னு சொன்னா கூட நம்புவேன்.

***க.1*** : நீ நம்பினாலும் நம்பாட்டியும் இப்பிடி தான் நம்ம சொசைட்டி இருந்துது. அதுவும் ஜஸ்ட் ஒரு நூறு வருஷம் முன்னாலதான்.

***க.2*** : பேசாம விதவையானவங்க இன்னொரு கல்யாணம் பண்ணியிருக்கலாமே.

***க.1*** : அதெப்பிடி முடியும்? அப்பதான் கல்யாணம்ங்கறதே வயசுக்கு வர்றதுக்கு முன்னால செய்யற விஷயமாதானே இருந்துது. பன்னெண்டு வயசுக்குள்ள கல்யாணம் ஆகாட்டா, அந்தக் குடும்பமே

சரியில்ல, பொண்ணு சரியில்லன்னுதானே நெனச்சுகிட்டிருந்தாங்க..

**க.2** : இதை மாத்த யாரும் முயற்சி பண்ணலியா ?

**க.1** : பண்ணதுனாலதான் இன்னிக்கு நீயும் நானும் இந்தக் கவலையெல்லாம் இல்லாம இருக்கோம். ஆனா அப்ப முயற்சி பண்ணவங்களுக்கு நெறைய்ய பிரச்சினை. வீரேசலிங்கம் பந்துலுன்னு ஆந்திரால இருந்த சீர்திருத்தவாதி விதவை மறுமணத்துக்குன்னே சங்கம் லாம் வெச்சிருந்தார்.

**குழு** : அது சாஸ்திர விரோதம்.

**குழு** : யார்லாம் அந்த கல்யாணத்துக்குப் போகறீங்களோ, அவங்கள ஜாதிய விட்டு ஒதுக்கி வெச்சிடுவோம்.

**க.2** : அப்பிடின்னா?

**குழு** : ஜாதிப் பிரஷ்டம் ஆனவங்களுக்கு யாரும் வீடு தரக் கூடாது. அவங்க வீட்டுல போய் சாப்பிடக் கூடாது. அவங்க வீட்டு விசேஷத்துக்குலாம் எந்த புரோகிதரும் வர மாட்டாங்க. இதை மீறி அவங்களோட தொடர்புவெச்சுக்கறஉறவுக்காரங்களையும் ஜாதிப் பிரஷ்டம் பண்ணிடுவோம். இது சங்கராச்சாரியார் உத்தரவு.

**க.1.** : இதெல்லாம் கூட எந்த விதவை கல்யாணத்துக்குத் தெரியுமா? கன்னி கழியாம, சாந்தி முகூர்த்தம் நடக்காமலே விதவையாயிருந்தாதான்.

**குழு** : வர்ஜின் விடோஸ்.

**குழு** : போனா போகுது. கல்யாணம் பண்ணிக் கட்டும்.

**குழு** : *அது கூட சாஸ்திர விரோதம்தான்.*

***க.2*** : *மேல் ஜாதில மட்டும்தான் இப்பிடியா? எல்லா ஜாதிலயுமா?*

***க.1*** : *கீழ் ஜாதில விதவை திரும்ப கல்யாணம் பண்ணிக்கறது அவ்வளவு சிக்கலா இல்ல. ஆனா, அவங்களுக்கு இதை விடப் பெரிய பிரச்சினை இருந்துது.*

***க.2*** : *என்ன?*

***க.1*** : *அவங்க டிரஸ் பண்றதுக்கே மேல் ஜாதி பர்மிஷன் வேணும்.*

***க.2*** : *அப்பிடின்னா?*

***க.1*** : *இதோ இப்ப இவங்க அதைத்தான் நடிக்கப் போறாங்க.*

**கட்டியக்காரி 1 குழுவிடம் செல்கிறாள். ஏதோ சொல்கிறாள்.**

**குழு திடுக்கிட்டு கோபமடைகிறது.**

**குழு** : *சீச்சீ. முடியாது அப்பிடிலாம் நடிக்க முடியாது.*

***க.2*** : *என்னப்பா தகராறு ?*

***க.1*** : *நான் சொல்றபடி நடிக்க முடியாதுங் கறாங்க.*

**குழு** : *நீ சொல்ற மாதிரி யாரும் நடிக்க வர மாட்டாங்க.*

***க.1*** : *அப்பறம் எப்பிடி இந்த சீனை நடிக்கறது?*

***க.2*** : *எனக்கு ஒண்ணும் புரியல. என்ன ப்ராப்ளம்?*

**குழு** : ஜிப்பாவல்லாம் கழட்டிட்டு டாப்லெஸ்சா நடிக்கணுமாம்.

**க.2 க1டம்** : உனக்கு என்ன பைத்தியமா?

**க.1** : எனக்கு பைத்தியம் இல்ல. நம்ம சொசைட்டிக்கே இப்பிடி ஒரு பைத்தியம் 140 வருஷம் முன்ன வரைக்கும் இருந்துது.

**க.2** : அப்பிடின்னா ?

**க.1** : இப்ப நமக்கு இந்த ஆடியன்ஸ் எதிர்ல, அரை நிர்வாணமா ஒரு சீனை நடிச்சுக் காட்டணும்னு சொன்னாலே கூசுது இல்ல ?

**குழு** : ஆமா.

**குழுவில் ஒருத்தி** : கூச்சம் மட்டும் இல்ல. உன்னை வெட்டிப் போடலாம்னு கோபம் வருது.

**க.1** : நெஜ வாழ்க்கைலயே அப்பிடி எப்பவும் இருக்கணும்னு சொன்னா எப்பிடி இருக்கும் ?

**குழு** : என்னது ?

**க.1** : ஆமா, கன்யாகுமரிலயும், கேரளாவிலயும் கீழ் ஜாதிப் பெண்களை அப்பிடிதான் நடத்தினாங்க.லைட்டை எல்லாம் அணைங்க. அந்த சீனை நடிப்போம்.

**(இருளில் குரல்கள் மட்டும்.)**

**பிரசங்கத்தை ஆரம்பிக்கலாமா ?**

**தோத்திரம் சாமி.**

**(பிரசங்கி ஆங்கிலத்தில் பைபிளிலிருந்து வாசிக்க, மற்றொரு குரல் அதைத் தமிழில் மொழி பெயர்க்கிறது.)**

**நிறைய குரல்கள்** : தோத்திரம் சாமி

**ஒரு பெண் குரல்** : சாமி, ஏன் நீங்க எப்பவும் கண்ணை மூடிக் கிட்டே எங்களோட பேசறீங்க?

**பிரசங்கி** : என்னால உங்களைப் பார்க்க முடியல. கூச்சமா இருக்கு அதை விட ரொம்ப கஷ்டமா இருக்கு.

**இன்னொரு பெண்குரல்** : எங்களுக்குதான் இப்பிடி திரிஞ் சுகிட்டிருக்க கூச்சமா இருக்கு. எங்களைப் பாக்கறவங்க யாரும் கூச்சப்பட்டதே இல்ல. நீங்கதான் முதல் ஆளு சாமி.

**பிரசங்கி** : நான் மட்டும் இல்ல. என்கூட இருக் கற அத்தனை பாதிரிகளும், எங்கள் குடும்பத்தினருக்கும் தினசரி உங்களைப் பார்க்கவே கூசுகிறது. இதைப் பற்றி இன்னும் ஒன்றும் செய்யாமலிருக்கிறோமே என்று.

**ஒரு பெண் குரல்** : என்ன செய்யலாம் சாமி ?

**பிரசங்கி** : மேலே மாட்டிக் கொள்ள அங்கி மாதிரி ஒரு உடை தைத்துத் தரட்டுமா ? என்ன நீங்கள் தயாரா ?

**பெண்கள் குரல்கள்** : அய்யய்யோ.. அப்பறம் ஏதாவது.. நம்ம ஜாதிக்கு இதெல்லாம் ஆகாது. வேதக்காரங்க நம்மை கொழப்பறாங்க. வேண்டாம். ஊர் பொல்லாப்பாயிடும்.

**ஒரு பெண்** : சாமி. எனக்கு தச்சுக் குடுங்க. நான் போட்டுக்கறேன்.

**மற்ற பெண்கள்** : யார் அது ? எசக்கிமுத்து மவளா...

**பெண்** : ஆமா.

மெல்ல மேலும் சில குரல்கள்: சாமி, எனக்கும் குடுங்க..எனக்கும்..எனக்கும்... எனக்கும்..

**பிரசங்கி** : எல்லாருக்கும் தர ஏற்பாடு செய்வோம். ஆனால், நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். யாருக்கும் பயப்படக் கூடாது. யாராவது கேட்டால், இப்பிடி இருப்பதுதான் கர்த்தருக்குப் பிரியம் என்று சொல்லுங்கள்.

***(கூட்டம் தமக்குள் பேசிக் கொண்டு கலைகிற ஒலிகள்.)***

***(சட்டென்று ஒளி வருகிறது.)***

***(குழுவினர், அப்போதுதான் தாங்கள் ஒவ்வொருவரும் போட்டுக் கொண்ட குப்பாயத்தைத் தாங்களே வியந்து பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள்.)***

***(சட்டைக்கு மேல் ஒரு சீலையையும் அணிந்து பார்த்து மகிழ்கிறார்கள்.)***

***(சட்டென்று ஒரு குரல் வருகிறது.)***

குரல் : ***ஏய் சிறுக்கி மவளுவளா.. என்னாடி கோலம் இது ? கழட்டுங்கடி எல்லாத்தையும்..***

***(சட்டென்று ஒளி அணைகிறது. பெண்கள் தாக்கப்படும் ஒலிகள். கூக்குரல்கள்.)***

குரல் : ***'கீழ்சாதி சிறுக்கிகளுக்கு மானம் என்னடி மானம்"***

***(மெல்ல ஒளி வரும்போது குழுவினர் இரு கரங்களையும் தங்கள் மார்புக்குக்***

**குறுக்கே கட்டியபடி முகம் கவிழ்ந்து உட்கார்ந்திருக்கிறார்கள்.**

**பின்னணியில் சண்டைக்காரி பாடல் மெல்லியதாக ஒலிக்கிறது.**

**இன்னொரு புறம் ஒளியில் கட்டியக் காரிகள் நிற்கிறார்கள்.)**

**க.2** : *அப்பறம் எப்பதான் இவங்க ரவிக்கை போட ஆரம்பிச்சாங்க ?*

**க.1** : *முப்பத்தேழு வருஷம் இதுக்கான போராட்டம் நடந்துது. நெறைய்ய பெண்கள் அவமானப்படுத்தப்பட்டாங்க. அவங்க வீட்டு ஆண்களை உதைச்சாங்க. ஆனா அவங்க பின்வாங்கல. கீழ் ஜாதி அடயாளமா கழுத்துல கல்மாலை போடற வழக்கம் இருந்துது. அந்த மாலையலாம் கழட்டி உடைச்சாங்க. கடைசில 1859லதான் திருவிதாங்கூர் ராஜா எல்லா ஜாதிப் பெண்களும் மேலாடை அணியலாம்னு அரசாங்க அனுமதி குடுத்தார்.*

**க.2** : *படிப்பு இல்லாததுதான் இத்தனை கொடுமைக்கும் காரணம் இல்ல ?*

**க.1** : *படிப்பு இருந்துது. ஆனா, சில பேர் மட்டும்தான் படிக்கலாம், மத்தவங்க படிக்கக்கூடாதுன்னு இருந்ததுதான் காரணம்.*

**க.2** : *ஏன் அப்பிடி ?*

**குழு** : *அது அப்பிடிதான்.*

**க.2** : *சரி.யார் எல்லாம் படிக்கக் கூடாதுன்னு வெச்சிருந்தாங்க ?*

**க.1** : *மேல் ஜாதியத் தவிர யாருக்கும் படிக்க*

வாய்ப்பு இல்ல. எந்த ஜாதியா இருந்தாலும், பெண்களுக்குப் படிக்க அனுமதி இல்லை.

**க.2** : ஏன் அப்பிடி ?

**குழு** : அது அப்பிடிதான்.

**க.2** : அப்ப எப்பிடி இதெல்லாம் மாறிச்சு ?

க.1 : இங்கிலீஷ் படிச்ச ஆம்பளைங்க கொஞ்சம் பேருக்கு வெக்கம் வந்துச்சு. அதனாலதான்.

க.2 : ஆம்பிளைங்களுக்குக் கூட வெக்கம் வருமா என்ன ? எதுக்கு வெக்கப்பட்டாங்க ?

க.1 : இங்கிலீஷ் படிக்க ஆரம்பிச்சதும்தான் ஆம்பிளைங்களுக்கு, உலகம் பூராப் பெரிய பெரிய அறிஞர்கள்லாம் சமத்துவம் சுதந்திரம் பத்தி எழுதி வெச்சிருக்கறதெல்லாம் தெரிஞ்சுது. நம்ம இப்பிடி இருக்கோமேன்னு வெக்கம் வந்துது.

க.2 : உடனே பெண்களையும் படிக்க அனுப்பிட்டாங்களா ?

குழு : அய்ய்.. அவ்வளவு சீக்கிரம் விட்டுடுவோமா ?

க.1 : இங்கிலீஷ் படிப்பு படிக்க ஆரம்பிச்சதும் கொஞ்சம் ஆண்கள் ரொம்ப கன்ஃப்யூஸ் ஆயிட்டாங்க.

க.2 : எப்பிடி ?

**(குழு நடித்துக் காட்டுகிறது.)**

ஆண் 1 : ஏண்டா வீட்டுக்குத் திரும்பிப் போறோம்னு இருக்கு. நான் என்ன பேசினாலும் அவளுக்குப் புரியறது கூட இல்ல.. நாலு எழுத்து படிச்சிருந்தா நல்லா இருக்கும்.

ஆண் 2 : அய்யயோ அவ படிச்சா ஆபத்து. அப்பறம் கண்டவனுக்கும் கடிதாசு எழுத ஆரம்பிச்சுடுவா..

ஆண் 3 : நம்ம பெண்கள்லாம் படிக்காம இருக்கற வரைக்கும் இங்கிலீஷ்காரா நம்மளை மதிக்கவே மாட்டா..

ஆண் 4 : படிக்க ஆரம்பிச்சுட்டா இந்த ஸ்திரீகள் நம்ம மதிக்க மாட்டா..

**ஆண் 5** : நம்ம பெண்களை அடிமையா வெச்சுண்டிருக்கறது எப்பிடி நியாயம்?

**ஆண் 6** : ஸ்திரீகளை விட புருஷா உசந்தவா இல்லியா, அதான்.

**ஆண் 7** : இங்கிலீஷ்காரனும் அதேதான் சொல்றான். நம்மளை விட அவன் உசந்தவன். அதனால நம்ம அவனுக்கு அடிமையாத்தான் இருக்கணும்கறான்.

**ஆண் 8** : ஆமாமா.. அவனைப் போகச் சொல்றதுக்கு முன்னால, நம்ம பழக்க வழக்கத்தல்லாம் திருத்திக்கணும்.

**ஆண் 9** : இது நமக்குள்ள இருக்க வேண்டிய விவகாரம். அவன் எதிர்ல நம்ம சண்டை போட்டுண்டா, அவனுக்கு குஷியா இருக்கு. உடனே நம்ம ஜாதி ஆசாரத்லலாம் அவன் சட்டம் போட்டு கையை வெக்க ஆரம்பிச்சுடறான்.

**ஆண் 10** : நம்ம சண்டை போடாட்டா கூட, அவனுக்கு நம்ம லட்சணம் தெரியாதா என்ன?

**ஆண் 11** : அவன்தான் ஊர் ஊராப் போய் சண்டாளனைலாம் தன் மதத்துக்கு மாத்திண்டிருக்கானே..

**ஆண் 12** : சண்டாளன்லாம் ஹிந்துவா? இல்லியா? நாலூ வர்ணத்துலயும் அவா வரலியே?

**ஆண் 13** : இந்தியால பிறந்தவங்க எல்லாருமே ஹிந்துதான்.

**ஆண் 14** : அப்ப ஏன் சாமி எங்களை கோவிலுக்குள்ள விட மாட்டேன்கறீங்க?

**ஆண் 15** : முதல்ல சீர்திருத்தம். அப்பறம்தான் பாலிடிக்ஸ்.

**ஆண் 16** : மொதல்ல அதிகாரம் நம்ம கைக்கு வரணும். அப்பறம்தான் ரிஃபார்ம்.

**பெண்கள் குழு** : அப்ப, நாங்க என்ன செய்யட்டும்?

**ஆண்கள்** : போய் சமையல் பண்ணுங்க.. நடுல நேரம் கெடைக்கறப்ப வீட்டுலயே உக்காந்து நாலு எழுத்து கத்துக்குங்க. பொம்மனாட்டிக்கு குடும்பம்தான் முக்கியம்.

**பெண்கள்** : ஆம்பளைக்கு?

**ஒரு குரல்** : தாசிதான் முக்கியம்.

**கட்டியக்காரி 2** : தாசின்னா ?

**குழுவில் பாதி பேர்** : பிராஸ்டிடிட்யூட்.

*குழுவில் இன்னொரு பாதி:* இல்ல, ஆர்ட்டிஸ்ட்..

*இரு பகுதியினரும் மாறி மாறி :* பிராஸ்டிடியூட், ஆர்ட்டிஸ்ட். பிராஸ்டிட்யூட், ஆர்ட்டிஸ்ட்.

**க.2** : ஏய், நீ சொல்லு, தாசி யாரு? பிராஸ்டி டியூட்டா ? ஆர்ட்டிஸ்ட்டா? (ஒளி அணைகிறது)

## இடைவேளை

மறுபடி ஒளி வரும்போது ஒரு தேவதாசியின் சதிர் நடனம் நடைபெறுகிறது.

பாட்டும் ஆட்டமும் முடியும்போது பலரும் சூழ்ந்துகொண்டு அவளைப் பாராட்டுகிறார்கள்.)

**க.2** : சொல்லு தாசின்னா யாரு? இப்ப சினிமா ஸ்டார் மாதிரி எண்ட்டர்டெயினரா?

**க.1** : தாசின்னா அடிமைன்னு அர்த்தம்.

**க.2** : யாருக்கு?

**க.1.** : தேவதாசின்னா கடவுளுக்கு அடிமைன்னு அர்த்தம்.

**குழுவில் ஒருபெண்** : அடிமை மட்டும் இல்ல. அவதான் நித்ய சுமங்கலி.

**க.2** : அப்பிடின்னா?

**பெண்** : அவ விதவையே ஆக மாட்டா.. அவ புருஷனுக்கு சாவே கெடையாது.

**க.2** : அதெப்பிடி?

**பெண்** : கடவுளுக்கு ஏது சாவு? தேவதாசிகள் எல்லாரும் கடவுளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க. சாமிக்குப் பொட்டுக் கட்டிகிட்டவங்க.

**க.2** : மத்த பெண்களுக்கு புருஷன் உத்யோகத்துக்குப் போய் சம்பாதிச்சுகிட்டு வந்து காப்பாத்தறான். இவங்களை யார் காப்பாத்துவாங்க ?

**பெண்** : கடவுள்தான் காப்பாத்தணும்.

**க.2** : எப்பிடி ?

**க.1** : கோவில்லருந்து வீடும் நெலமும் மான்யமும் குடுப்பாங்க.

**க.2** : கோவில்ல ஏது அவ்வளவு பணம் ?

**க.1** : கோவிலுக்கு ராஜாக்களும் பணக்காரங்களும் நெறைய்ய சொத்து குடுத்துருந்தாங்க.

**க.2** : சரி. தேவதாசி கடவுளுக்கு அடிமைன்னா, அவ என்ன செய்யணும் ?

**க.1** : தினசரி பூஜைகள்ல ஆரத்தி எடுக்கறது முதலிய சடங்குகள்ல கலந்துக்கணும். சாமி வீதி உலா வரும்போது பாடணும். ஆடணும். திருவிழாக்கள்லபங்கேற்கணும். மத்த நேரத்துல பெரிய மனுஷங்க வீட்டு விசேஷத்துல ஆடலாம்.

அவங்களோட கலையை ரசிக்கத் தெரிஞ்ச வசதியான பெரிய மனுஷங்கள்ல ஒருத்தரைத் தேர்ந்தெடுத்து அவரோட பாதுகாப்புல இருந்துக்கலாம்.

**க.2** : அப்பிடின்னா?

**க.1** : அவருக்கு ஏற்கனவே மனைவி இருந்தா, இவ "அபிமான மனைவி' ஆயிடுவா.

**க.2** : ஓ, சின்ன வீடா?

**பெண்** : உண்மையில அதான் பெரிய வீடு. சொந்தப் பொண்டாட்டிக்கு படிக்கத் தெரி யாது. பாடத் தெரியாது. ஆடத் தெரியாது. சுவாரஸ்யமா பேசத் தெரியாது. அப்பிடி இருக்கச்ச, எந்த வீட்டுல ஆம்பளை அதிக நேரம் தங்குவான் சொல்லு ?

**க.1** : ஆமாம்ப்பா. கேட்டா கொஞ்சம் விசித்திரமாதான் இருக்கும். ஆனா

அன்னிக்கு இருந்த பெண்கள்ல, அதிகப் படிப்பும், அதிக சுதந்திரமும் இருந்தது தேவதாசிகளுக்குத்தான். அவங்க கலைஞர்களா இருந்தாஙக. இலக்கியம், காவியம்லாம் படிச்சிருந்தாங்க. அவங்களுக்குப் பிடிச்ச பாட்டும் ஆட்டமும் ஆடிக்கிட்டு சந்தோஷமா இருக்க முடிஞ்சுது. என்ன, அப்பப்ப, இந்த கோவில் பூசாரிகள், தர்மகர்த்தா, பண்ணையார்னு ஆம்பளைங்க தொல்லை இருந்துகிட்டு இருக்கும்.

**பெண்** : ஆனா, சாஸ்திர சம்பிரதாயப்படி தேவ தாசிக்கு கோவில்ல மரியாதை அதிகம். ஒரு தாசி செத்துட்டா, அவ கல்யாணம் பண்ணியிருக்கற சாமியோட கோவிலை உடனே மூடிடுவாங்க. பூஜையெல்லாம் நிறுத்திடுவாங்க. கோவில் வாசல்ல அவ பாடையை நிறுத்தி சாமி போட்டிருக்கற மாலையையும் துணியையும் எடுத்து வந்து போர்த்துவாங்க. அன்னிக்கு சாமிக்கு வழக்கமான நைவேத்யம்லாம் கெடையாது. அவரும் துக்கம் அனுசரிக்கறதா நம்பிக்கை.

***க.2*** : நெஜமாவே இப்பிடிலாம் இருந்துதுதா?

***க.1*** : எப்பிடி இருந்துதுன்னு ஆளுக்கு ஆள் விதவிதமா சொல்றாங்க. ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம். நூறு வருஷத்துக்கு முன்னால கோவில் தாசிகள் நிலைமை மோசமா இருந்துது. அவங்களுக்கு கலைகளைப் பாதுகாக்கறதுக்கு முன்ன தங்களைக் காப்பாத்திக்கறதே கஷ்டமாயிடுச்சு.

***க.2*** : என்ன ஆச்சு ?

**பெண் 1** : ராஜாக்கள் காலம் முடிஞ்சுப் போச்சு. வெள்ளைக்காரங்க வந்துட்டாங்க.

**பெண் 2** : கோவில்களுக்கு மான்யம் உதவி எல்லாம் கட் ஆயிடுச்சு.

**பெண் 3** : வெள்ளைக்காரங்க ஆட்சியில வரி அதிகமாயிடுச்சு. ஜமீந்தார்களையும் பண்ணையார்களையும் மட்டுமே நம்பி இருக்க வேண்டியதாயிடுச்சு.

**க.2** : அப்ப தாசிகள் என்ன செஞ்சாங்க ?

**க.1** : survival of the fittestதான்.

**பெண்** : இன்னொரு பக்கம் வெள்ளைக்காரன்ங்க ராணுவம் பல டவுன்கள்ல நிரந்தரமா முகாம் வைக்க ஆரம்பிச்சாங்க.

**பெண்** : பாவம் ஐயாயிரம் மைல் தாண்டி தன் பெண்டாட்டியல்லாம் விட்டுட்டு இங்கே வந்து இருக்கற ராணுவ வீரனுக்கு கஷ்டமா இருக்காதா ?

**பெண் 2** : பல டவுன்கள்ல விபசாரம் அதிகமாச்சு.

**க.1** : கல்கத்தால விபசாரம் பத்தி அப்ப ஒரு சர்வே எடுத்தாங்க. அன்னிக்கு கல்கத்தா விபசாரிகள்ல நூத்துக்கு தொண்ணூறு பேரு, குழந்தைல கல்யாணம் நடந்து விதவையாகி, வீட்டுக் கொடுமை தாங்காம ஓடி வந்து விபசாரியான மேல் ஜாதி பொண்ணுங்கதானாம்.

**க.1** : இந்த சூழ்நிலையில யார் தேவ தாசி, யார் வெறும் தாசி, யார் நாட்டியக்காரி,யார் விபசாரிங்கறதெல்லாம் குழம்பிப் போச்சு.

**க.2** : சேச்சே.. ஒரே குழப்பமா இருக்கே.. நீ

சொல்றபடி பாத்தா, அந்த பீரியட்ல, நம்ம சமூகத்ல இருந்த பெண்களுக்குக்கிடைச்ச சாய்சஸ் எல்லாமே மோசமா இருக்கு. ஒண்ணு, குழந்தையா இருக்கறப்பவே கல்யாணம் ஆயிடும். புருஷன் செத்துப் போனா விதவையாவே வருஷக்கணக்கா கஷ்டப்படணும். உயிரோட இருந்தான்னா, வீட்டுக்குள்ளயே வேலைக்காரி மாதிரி இருக்கணும். இதெல்லாம் வேண்டாம் கலை இலக்கியம்னு ஆர்வம் ஏற்பட்டா ,அதைச் செய்யறதுக்கு தேவதாசியா ஆனாதான் முடியும். வேற சாய்சே இல்லியா ?

**க.1** : ஒரே சாய்ஸ்தான்.

**க.2** : என்ன ?

**க.1** : சண்டைக்காரியா மாறணும். அப்பதான் ஏதாவது உருப்படியா செய்யமுடியும்.

**க.2** : அப்பிடி யாராவது இருந்தாங்களா ?

**க.1** : அப்பிடி கொஞ்சம் பேராவது இருந்த தாலதான், இன்னிக்கு நீயும் நானும் இப்பிடி காலேஜுக்குலாம் வந்து நாடகம் போட்டுகிட்டுருக்க முடியுது.

**க.2** : யார் அவங்க ?

**க.1** : வேண்டாம்ப்பா. உனக்குதான் அந்தப் பாட்டே பிடிக்கலியே.

**க.2** : பரவாயில்ல. பாடச் சொல்லு.

**க.1** ; வேண்டாம் வேண்டாம். திரும்பவும் நீ தகராறு பண்ணாலும் பண்ணுவே. உனக்குப் பிடிச்ச பாட்டையே திரும்பப் பாடச் சொல்றேன்.

**க.2** : என்ன பாட்டு ?

**க.1** : கல்யாணப்பாட்டு.

**க.2** : யாருக்குக் கல்யாணம் ?

**க.1** : ருக்மாபாய்க்கு.......

**(திருமணப்பாட்டைக் குழு பாடுகிறது. மேடையில் திருமண ஏற்பாடுகள் நடக்கின்றன)**

**(ருக்மாபாய் மேடையில்.)**

**க.2** : ருக்மாபாய்க்கு என்ன வயசு ?

**குழு** : பதினொண்ணு.

**க.2** : இதுவும் லேட் மேரேஜ்தானா ?

**பிக்காஜியின் அம்மா`** : ஆமாமா. ரொம்ப நாளா இவ கிட்ட சொல்லிகிட்டிருக்கேன். என் பையன்கள்ல ஒருத்தனுக்கு ருக்மாவை கல்யாணம் பண்ணி வெச்சுடுன்னு. ஒரு வழியா இப்பதான் நடக்கறது.

**ருக்மாவின் அம்மா** : ரொம்ப நச்சரிச்சா. ஏதோ சரின்னு பண்ணிட்டோம். இப்பவும் கொஞ்சம் கவலையாதான் இருக்கு, என்னப்பா?

**ருக்மாவின் தாத்தா** : ஆமாமா.. இந்தப் பையன் பிகாஜிக்கு பொறுப்பே இல்ல. படிப்பும் ஒழுங்கா வரல..என்ன செய்யப் போறானோ தெரியல்ல..

**இன்னொருவர்** : கவலைப்படவேண்டாம். நான் பாத்துக்கறேன். அவனை சரி பண்ணிடலாம.

**க.2** : இவர் யாரு? ருக்மாவோட அப்பாவா?

**இன்னொருத்தர்** : சார்தான் டாக்டர் சகாராம் அர்ஜுன். ஜெயந்திபாயோட ஹஸ்பண்ட். வெரி ரெஸ்பெக்டபிள் மேன்.

**க.2** : அதான் கேட்டேன். ருக்மாபாயோட அப்பாதானே ?

**ருக்மாபாயின் அம்மா** : ருக்மாபாய் அப்பா அவ ரெண்டு வயசா இருக்கும்போதே இறந்து போய்ட்டார். அப்ப எனக்கு பதினேழு வயசு. அப்பறம் ஆறு வருஷம் கழிச்சு, இவர் என்னக் கல்யாணம் பண்ணிகிட்டார்.

**க.2** : ஆச்சரியமா இருக்கு. இவங்க மறுமணம் பண்ணியிருக்காங்க.

**க.1** : அவங்க தச்சர் ஜாதி. அதுல அவ்வளவு பிரச்சினை இருக்கல. தவிர கல்யாணம் பண்ணிகிட்டவர் டாக்டர். படிச்சவர். இங்கிலீஷ்காரங்க கூடலாம் பழகறவர். கல்யாணத்துகே எவ்வளவு யுரோப்பியன்ஸ் வந்திருக்காங்க பாரு.

**க.2** : ருக்மா இன்னும் வயசுக்கு வரல இல்லியா ? அப்ப கல்யாணம் முடிஞ் சதும் அவ அம்மா வீட்டுலயேதானே இருக்கப் போறா ?

**க.1** : ஆமா.

**க.2** : அங்க என்ன நடந்துச்சு ? ருக்மாவும் பூல்மணி தேவி மாதிரி....

**க.1** : அவங்க வீட்டுக்கே போய்ப் பார்க்கலாமே.

**(குழு கலைகிறது ருக்மாபாய் வீடு.)**

**(தாதாஜி பிக்காஜியும் டாக்டர் அர்ஜூனும் உட்கார்ந்திருக்கிறார்கள்)**

**க.2** : என்ன இது, ருக்மா வீட்டுல இவன் இருக்கான் ?

**க.1** : ஆமா. கல்யாணத்துக்கு அப்புறம் ருக்மாவை அவன் வீட்டுக்கு அனுப்ப முடியாதுன்னு சொல்லிட்டாங்க. அவன் தான் இங்க வந்து வீட்டு மாப்பிள்ளையா இருக்கணும்கற கண்டிஷன்லதான் அந்தக் கல்யாணமே நடந்துச்சு.

**க.2** : ஏன் அப்ப்டி ?

**க.1** : அது அப்பிடிதான்னு இந்த ஒரு தடவை மட்டும் சொல்ல முடியாது. இது ஒரு வித்தியாசமான காரணம். பாரேன்.,

**(டாக்டர் அர்ஜுன் வருகிறார்.)**

**அர்ஜுன்** : பிக்காஜி. ஏன் நீ இன்னிக்கு ஸ்கூல் போகல ?

**பிக்காஜி** : போகல. போகப் பிடிக்கல.

**அர்ஜுன்** : நோ நோ.. இது தப்பு. ஒழுங்கா ஸ்கூல் போகணும். ருக்மா போகறா பார்.

**பிக்காஜி** : நான் போக மாட்டேன்.

**அர்ஜுன்** : ஏன் ?

**பிக்காஜி** : ஆறாங் கிளாஸ்ல என்னை விட சின்னப் பையன்கள்தான் இருக்காங்க. எனக்கு வெக்கமா இருக்கு.

**அர்ஜுன்** : படிப்பை பாதில பாதில விட்டுட்டுப் போனா அப்பிடிதான் ஆகும். அதெல்லாம் பரவாயில்ல. நாளைலருந்து போ.

***(ருக்மா மௌனமாக ஒரு ஓரத்தில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருக்கிறாள். எழுந்து வந்து கேட்கிறாள்.)***

**ருக்மா** : அப்பா. இதை எப்பிடி உச்சரிக்கறது ? சீ.ஓ என் ஃப் யூஎஸ் ஐ ஓ என்.

**அர்ஜுன்** : இப்ப எனக்கு நேரம் இல்ல. அப்பறமா கேளு .

***(உள்ளே போய் விடுகிறார்.)***

***(ருக்மா தாதாஜியைப் பார்க்கிறாள். அவன் அவளுக்கு அழகு காட்டி விட்டு வெளியே போகிறான்.)***

***(ருக்மாபாயின் மாமா வீடு.தாதாஜி பிக்காஜி, அவனுடைய அண்ணன், அம்மா, டாக்டர் அர்ஜுன், ருக்மாவின் தாத்தா, அம்மா ஆகியோர் உட்கார்ந்திருக்கிறார்கள். ருக்மா ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கிறாள்.)***

**தாதாஜியின் அண்ணன்** : ருக்மாவை இனிமே ஸ்கூலுக்கு அனுப்ப வேண்டாம். வயசுக்கு வந்துட்டப்பறம் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பறது நல்லா இருக்காது.

**டாக்டர்** : பரவாயில்ல. இன்னும் கொஞ்ச நாள் படிக்கட்டுமே.

**தாதாஜி அம்மா** : இல்லயில்ல. நம்ம குடும்பத்துல அப்பிடி வழக்கமே கெடையாது.

**டாக்டர்** : சரி. நீங்க சொல்றபடி செய்யலாம். அவ வீட்டுலயே இருந்து படிக்கட்டும்.

***க.2*** : டாக்டர் கொஞ்சம் முற்போக்கானவர்னு சொன்னே ?

***க.1*** : கொஞ்சம்தான். தவிர , கல்யாணம் ஆன பொண்ணு படிக்க ஸ்கூல் போகறதுன்னா,அவ புருஷன் வீட்டுக்காரங்க பர்மிஷன் இல்லாமசெய்யக்கூடாதுங்கறது அப்ப ரொம்ப சகஜம்.

***டாக்டர்*** : ஆனா, பிக்காஜி படிக்கப் போகணும். அவன் ஒழுங்கா படிப்பை முடிப்பாங்கற நம்பிக்கையிலதான் நான் அவனுக்கு செலவு பண்ணிகிட்டிருக்கேன்.

***அவன் அம்மா*** : இப்பலாம் அவனுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லயே.

***டாக்டர்*** : எனக்கும் தெரியும். ஆஸ்த்மா, டீ.பி மாதிரி இருக்கு.மருந்து குடுத்துகிட்டிருக்கேன். சரியாயிடும். அதுக்காக படிப்பை நிறுத்தக் கூடாது. படிச்சாதான் அவன் நாலு காசு சம்பாதிக்கலாம். நாளைக்கு ருக்மாவோட தனியா குடித்தனம் வைக்க முடியும்.

***பிக்காஜியின்***

***அண்ணன்*** : கல்யாண சடங்கெல்லாம் இன்னும் பாக்கியிருக்கே ? எப்ப வெச்சுக்கலாம் ? நல்ல நாள் பாத்து சொல்லுங்க.

***டாக்டர்*** : சாந்தி முகூர்த்தத்துக்கு இப்ப அவசரம் இல்ல. இன்னும் கொஞ்ச நாள் ஆகட்டும். இவனுக்கும் உடம்பு சரியாகட்டும். இவ்வளவு சீக்கிரமா குழந்தை பொறந்தா அவளுக்கும் நல்லது இல்ல. குழந்தையும் ஆரோக்கியம் இல்லாம இருக்கும். சரி. நான் புறப்படணும்.

***(ஒளி அணைகிறது.)***

***(மறுபுறம் பிக்காஜியின் இன்னொரு மாமா வீடு.)***

**நாராயண் (மாமா)** : அந்த டாக்டர் அப்பிடிதான் சொல்லுவான். ருக்மாவோட சொத்து மேல அவனுக்குக் கண்ணு. அவங்க கைய விட்டுப் போய்டக் கூடாதுன்னு நெனைக்கறாங்க.

**பிக்காஜியின் அண்ணன்** : சொத்து மதிப்பு எவ்வளவு இருக்கும் ?

**நாராயண்** : இப்ப எப்பிடியும் இருபத்தையாயிரம் ருபாய் இருக்கும்.அவ அப்பா செத்தப்ப ருக்மா அம்மா பேருக்கு எழுதி வச்சாரு. அவ இந்த டாக்டரைக் கல்யாணம் செஞ்சப்போது, அதை ருக்மா பேருக்கு மாத்தியிருக்கா. ஆனா ருக்மா அவங்க கூடவே இருந்தாதான் சொத்தை அவங்களே அனுபவிக்க முடியும்னு திட்டம் போடறாங்க.

**பிக்காஜி** : நானும் ஸ்கூல் போகணும்னு டாக்டர் மாமா கட்டாயப்படுத்தறார்.

**நாராயண்** : உனக்கு எதுக்குடா படிப்பு ? அதான் அவ சொத்து வேற இருக்கு. என் கட்டட வேலையெல்லாம் மேற்பார்வை பாரு. செலவுக்குலாம் என்கிட்ட பணம் வாங்கிக்க.

**பிக்காஜியின் அண்ணன்** : ஆமாம். பேசாம நம்ம எல்லாரும் இங்க வந்துடலாம்.

**பிக்காஜியின் அம்மா** : அதுக்கு முன்ன ஒரு நாள் ருக்மாவை இங்க அழைச்சிகிட்டு வா.

**க.2** : அப்ப ருக்மாவோட அவன் அந்த வீட்டுக்குப் போய்ட்டானா?

**க.1** : போனான். ஆனா போன எடத்துல நடந்ததே வேற..

**(மறுபடியும் நாராயண் வீடு. பிக்காஜியும் ருக்மாவும் நுழைதல்.வீடு பரபரப்பாக இருக்கிறது.)**

**நாராயண்** : சனியனே. என்ன துணிச்சல் இருந்தா இப்பிடி கெணத்துல போய் விழுவே ? (தன் மனைவியை எட்டி உதைக்கிறார்)

**ருக்மா** : என்ன ஆச்சு மாமி ?

**நாராயணின் வைப்பாட்டி** : அவளை என்னடி மாமின்னு கூப்பிடறே? என்னதான் மாமின்னு கூப்பிடணும்.

**(நாராயண் மனைவி அழுகிறாள்.)**

**நாராயண்** : ஒழுங்கா வீட்டு வேலையை பாத்துகிட்டு போடற சோத்தை சாப்பிட்டுகிட்டு கெட. இந்த மாதிரி கலாட்டாலாம் செஞ்சே, நானே கெணத்துல பிடிச்சு தள்ளிடுவேன் ஜாக்கிரதை.

**ருக்மா தாதாஜியிடம்** : இங்கயா வந்து என்னை இருக்க சொல்றீங்க ?

**தாதாஜி** : இதெல்லாம் மாமா விஷயம் நமக் கென்ன அதைப் பத்தி ?

**ருக்மா** : இந்த வீட்டுல ஒரு நிமிஷம் நிம்மதியா நான் உக்காந்து படிக்க முடியுமா ?

**தாதாஜி** : எதுக்கு படிக்கணும் ? அதான் நெறைய்ய பணம் வெச்சிருக்கியே.

**(ருக்மா அவனையே உற்றுப் பார்க்கிறாள்.)**

**(ஒளி அணைகிறது.)**

**க.2** : அப்ப அவ பணத்து மேலதான் அவங்களுக்கு கண்ணூா இல்ல ?

**க.1** : ருக்மா மேலயும் நாராயண் மாமாவுக்கு ஒரு கண்ணு.

**க.2** : என்ன சொல்றே நீ ?

**க.1** : அந்த காலத்துல அதெல்லாம் ரொம்ப சகஜமா இருந்துது. தங்களோட பொறுப்புல இருக்கற சின்னப் பசங்களுக்குக் கல்யாணம் பண்ணி வெச்சுட்டு, வர்ற பொண்ணைத் தன்னோட வெப்பாட்டியா மாத்திக்கற அங்கிள்ஸ்லாம் இருந்தாங்க.

**க.2** : அப்ப ருக்மா என்ன செஞ்சா ?

***(ஒளி மாறுகிறது.)***

**ருக்மா டாக்டரிடம்** : நான் அந்த வீட்டுக்குப் போக முடியாது அப்பா.

**ருக்மாவின் தாத்தா** : குழந்தை சொல்றது சரி. அந்த நாராயண் பெரிய போக்கிரி. என்ன வேணும்னாலும் செய்வான்.

**டாக்டர்** : சரி. பிக்காஜியும் சொல்ற பேச்சைக் கேக்க மாட்டேங்கறான். ஸ்கூலுக்கு போறதில்ல. ரெண்டு வாரமா நாராயண் வீட்டுலயே தங்கிகிட்டு இருக்கான்.

**ருக்மா** : இனிமே அங்கதான் இருக்க போறாராம். என்னையும் அங்க வந்துடுன்னு சொன்னார். ஆனா நான் போக மாட்டேன்.

**டாக்டர்** : நீ போக வேணாம்ம்மா. உன்னை வெச்

சுக் குடித்தனம் நடத்த ஏத்தமாதிரி தனியா வீடு பாக்கறவரைக்கும் உன்னை அனுப்ப முடியாதுன்னு சொல்லிடலாம்.

**ருக்மா** : அப்பா. நான் திரும்பவும் ஸ்கூலுக்குப் போறேனே.

**தாத்தா** : அது முடியாதும்மா. கல்யாணம் ஆயிட்ட பொண்ண படிக்க அனுப்பறதுக்கு சம்பந்திங்க வீட்டு சம்மதம் வேணும். என்னைக் கேட்டா நீ அவன் வீட்டுக்குப் போய் அவனோட இருந்து அவனை மாத்த முடியுமான்னு பாக்கறது தான் நல்லது.

**ருக்மா** : என்ன கல்யாணம் தாத்தா இது ? எனக்கு வவரம் தெரியாத வயசுல கல்யாணம் பண்ணீங்க. ஏதோ அவராவது படிச்சவரா, நல்லவரா இருந்தா பரவாயில்ல. அதுவும் இல்ல. இந்தக் கல்யாணத்தை எப்பிடி நான் ஏத்துக்க முடியும் ? இதை மறந்துட்டு நான் பாட்டுக்கு படிச்சு அப்பா மாதிரி டாக்டரா ஆகணும்னு நெனைக்கறேன். அப்பாவோட யுரோப்பியன் ஃபிரெண்ட்ஸ்லாம் எனக்கு எவ்வளவு ஹெல்ப் பண்றாங்க தெரியுமா?

**தாத்தா** : எல்லாம் சரிதான். ஆனா ஹிந்து சாஸ்திரப்படி கல்யாணம்கறது ஒரு ஆயுள்கால பந்தம்ம்மா. அதை ரத்து பண்ணவே முடியாது.

***(ஒளி மாறுகிறது.)***

**நாராயண்** : நம்ம ஹிந்து சாஸ்திரப்படி கல்யாணம் கறது ஆயுள் கால பந்தம். உன் பொண் டாட்டிய உன்கிட்ட அனுப்பாம அவங்க எப்பிடி வெச்சுகிட்டிருக்கமுடியும் ?

வக்கீல் நோட்டீஸ் அனுப்பு.

**பிக்காஜி** : என்னன்னு அனுப்பறது ?

**நாராயண்** : அதெல்லாம் வக்கீல் பாத்துப்பார்.

***(ஒளி மாறுகிறது.)***

**ருக்மா** : இப்ப என்னப்பா செய்யறது ?

**டாக்டர்** : கோர்ட்டுல போய் நிக்க வேண்டியதுதான். நடக்கறது நடக்கட்டும். (போய் விடுகிறார்)

**ருக்மாவின் நண்பர்கள்** : don't worry rukmaa. நீ பாட்டுக்கு படி. எழுது.

***(ருக்மா உட்கார்ந்து எழுதுகிறாள்.)***

***(ஒளி மாறுகிறது.)***

***க.2*** : கோர்ட்டுல என்ன ஆச்சு ?

***க.1*** : கோர்ட்டுல கேஸ் வர்றதுக்கு முன்ன, டாக்டர் சகாராம் அர்ஜுன் செத்து போய்ட்டார். ருக்மாவுக்கு ஓரளவு சப் போர்ட்டா இருந்தது அவர்தான். ருக் மாவோட அம்மாவும் தாத்தாவும் பிக்காஜியோட சமரசமா போகணும்னு நெனைச்சாங்க. ஆனா, அவன் நாளுக்கு நாள் இன்னும் மோசமாயிட்டான். வேலை செய்யறது இல்ல. கெட்ட பழக்கங்கள் அதிகமாயிடுச்சு. உடம்பும் மோசமாயிடுச்சு. அனா நாராயண் மாமாவோட முழு சப்போர்ட்ல இருந்தான்.

***க.2*** : ருக்மா என்ன செஞ்சா?

***க.1*** : அவளுக்கு இப்ப முழுக்க முழுக்க சப்போர்ட் பண்ணது அவளுடைய

அப்பா மூலமா கெடச்ச ஃபிரெண்ட்ஸ் தான். அதுல நெறைய்ய சமூக சீர்திருத் தவாதிகள் இருந்தாங்க. பத்திரிகை ஆசிரியர்கள் இருந்தாங்க. ருக்மா கேஸ் கோர்ட்டுக்கு வர்ற சமயத்துல, அவ எழுதின ரெண்டு லெட்டர்ஸ் பத்திரிகைல பப்ளிஷ் ஆச்சு.

**க.2** : என்ன லெட்டர் ?

**க1** : லெட்டர்ஸ் ஃப்ரம் அ ஹிந்து லேடின்னு பேர் போடாம வந்துது.

***(ஒளி மாறுகிறது.)***

***(ருக்மா கடிதம் எழுதுகிறாள்.)***

**ருக்மா குரல்** : பெஹ்ரம்ஜி மலபாரி அவர்களின் குறிப்பு களைக் கண்டேன். இந்தியப் பெண்களின் அவல நிலையைப் பற்றி அவரை விட அழுத்தமாக யாராலும் சொல்ல முடி யாது. எனக்கு ஆங்கிலத்தை விடவும் மராத்தியில் நன்றாக எழுத வரும். இருந் தாலும், நான் ஆங்கிலத்தில் எழுதுவதை ஒரு நண்பரின் உதவியோடு செம்மைப் படுத்தி அனுப்புகிறேன்.

**பத்திரிகை ஆசிரியர்** : (கடிதங்களைப் படித்துவிட்டு): ஒண்டர்புல். தீஸ் லெட்டர்ஸ் மஸ்ட் பி ரெட் பை எவ்ரி உமன் அண்ட் மேன் கன்சர்ண்ட் அபவுட் இண்டியன் விமன்.

**க.1** : யார் இவர் ?

**க.2** : டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகையோட எடிட்டர். உனக்கு டாஃபடில்ஸ் பாட்டு தெரியுமில்ல ?

*க.1* : வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் எழுதினது.

*க.* : ஆங். அந்த வேர்ட்ஸ்வொர்த்தோட பேரன் இவர். ஹென்ரி கர்வன். இவர் ருக்மா எழுதின லெட்டர்சைத் தன் பத்திரிகைய்ல வெளியிட்டு அதை ஆதரிச்சு தலையங்கம்லாம் எழுதினார். பாம்பே கெசட்னு இன்னொரு பத்திரிகைலயும் இந்த லெட்டர்ஸ் வெளியாகறதுக்கு ஏற்பாடு செஞ்சார்.

*க.1* : ருக்மா என்ன எழுதியிருந்தா ?

**(குழுவில் ஒவ்வொருவர் கையிலும் ஒரு பத்திரிகை. ஒவ்வொருவராகப் படிக்கி றார்கள்.)**

*1* : திருமணம் ஆண்களின் கல்வியை எந்த விதத்திலும்பாதிப்பதில்லை.முதல்மனைவி செத்துப்போனால் அவன் இரண்டாவது மனைவி ஏற்படுத்திக் கொள்லலாம். அல்லது ஒரே நேரத்தில் எத்தனை மனைவிகள் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். கல்யாணம் ஆனதுமே ஆணை யாரும் இன்னொரு வீட்டுக்குப் போய் அங்கே பணிவிடை செய்து கொண்டிரு என்று சொல்வதில்லை. அவனை எந்த மாமியாரும் கொடுமைப் படுத்துவதில்லை. கல்யாணம் ஆகிவிட்டது என்பதற்காக அவன் படிப்பை நிறுத்துவதுமில்லை. ஆனால், ஒரு பெண் பள்ளிக்கூடம் போய், கல்வியின் ருசியை அறிந்து அனுபவைக்க ஆரம்பிக்கிற வேளையில், கல்யாணத்தின் பெயரால்,அவளை வீட்டில் முடக்கி விடுகிறார்கள்.

*2.* : பெண்ணோ கல்யாணம் ஆகிவிட்டால், புகுந்தவீட்டாரின் கருணையில் இருக்

கிறாள். அவளை என்ன கொடுமைப் படுத்தினாலும் எதுவும் பேச முடியாது. எதிர்த்தால் திரும்பி உன் வீட்டுக்குப் போ என்று கடைசி ஆயுதத்தைப் பிரயோகிப்பார்கள். அவளுக்கென்று எந்த வீடுமில்லை. பிறந்த வீடும் இனி அவளுடையது இல்லை. கணவனின் ஆதரவை நாடவும் முடியாது. அவனே மனைவியையும் குழந்தைகளையும் காப்பாற்ற, தன் பெற்றோரை நம்பியி ருக்கிறான். படித்த கணவனாக இருந் தால் கூட, அவன் தன் பெற்றோர் மீது வருத்தம் கொள்கிற அளவுக்கு தன் மனைவி படிக்காதவள் என்பது பற்றி வெறுப்பானவனாகவும் இருக்கிறான். விதவைகள் நிலைமையைப் பற்றி என்ன சொல்ல? விதவைகளுக்கு இழைக் கப்படும் விதிகளையும் கட்டுப்பாடு களையும், அதே போல மனைவியை இழந்த ஆண்களுக்கும் செய்து பார்த்து முடிவுக்கு வரும்படி நான் என் நாட்டு மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

***3*** : எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சட்டம் தான். பெண்ணுக்கு பதினைந்து வயதுக்கு முன்னாலோ, ஆணுக்கு 20 வயதுக்கு முனாலோ திருமணம் செய்யக் கூடாது என்று சட்டம் இயற்றுவதுதான் ஒரே வழி.

**(குழுவினர் தனித்தனி கோஷ்டிகளாகப் பிரிந்து கருத்து கூற ஆரம்பிக்கிறார்கள்.)**

**ஒரு கோஷ்டி** : நியாயமா இருக்கு. கல்யாணம்கறது வெளையாட்டா என்ன, இஷ்டப்படி மாத்தறதுக்கு ?

**இன்னொரு கோஷ்டி** : விவரம் தெரியாத வயசுல கல்யாணம்

பண்றதை நிறுத்தினா இந்த மாதிரி பிராப்ளம்ஸ் வராது.

**ஒரு நீதிபதி** : எக்சலெண்ட் லெட்டர். ப்ட் வெரி டிஸ்டர்பிங்.

**க.1** : யார் அவர் ?

**க.2** : அவர்தான் நீதிபதி பின்ஹே. தாதாஜி போட்ட வழக்கு அவர் முன்னாலதான் விசாரணைக்கு வந்துது. காலில பேப்பர்ல ஹிண்டு லேடியோட லெட்டரைப் படிச்சுட்டு கோர்ட்டுக்கு வந்தார். தாதாஜியோட கேசை டிஸ்மிஸ் பண்ணிட்டார்.

**நீதிபதி** : இந்தத் திருமணம் நடைபெற்ற போது பெண் தன் சம்மதம் தெரிவிக்கும் வயதிலேயே இல்லை. இப்போது தன் விருப்பத்துக்கு மாறாக ஒரு பெண்ணை அவள் கணவனிடம் கட்டாயப்படுத்திக் கொண்டு போய் சேர்க்கச் சொல்வது மனிதத் தன்மையற்ற செயல். அப்படி செய்யும்படி இந்த கோர்ட் உத்தரவிட முடியாது. எனவே கேஸை டிஸ்மிஸ் செய்கிறேன்.

**(ருக்மா மகிழ்ச்சியடைகிறாள்)**

**ஒரு கோஷ்டி** : பிரமாதமான தீர்ப்பு.

**மறு கோஷ்டி** : அப்பிடியா? குழந்தையா இருக்கச்ச செஞ்ச கல்யாணம்லாம் செல்லாதா? அப்பிடினா, சீர்திருத்தம் பேசறவங்க கூட அந்த மாதிரி அப்பா அம்மாவுக்குப் பொறந்தவங்கதானே? இந்த கேசை விடக்கூடாது. இது ஹிந்து தர்மத்துக்கே ஆபத்தானது.

**ஒருவர்** : ஆமா, ஹிந்து தர்மத்துல தலையிட பிரிட்டிஷாருக்கு உரிமை இல்லை.

**க.1** : யார் அவர் ?

**க.2** : அவர்தான் பால கங்காதர திலகர்.

**க.1** : திலகரா ?

**க.2** : ஆமா. அவர் தனிப்பட்ட முறைல, என் பெண்களை நான் ருதுவாகறதுக்கு முன்ன கல்யாணம் செஞ்சு தர மாட்டேன். ஆனா, இதுல பிரிட்டிஷ் தலையிட்டால், நான் எதிர்ப்பேன்னு சொல்லி ருக்மாவுக்கு எதிரா கடுமையா தன் பத்திரிகைல எழுதினார். அவரோட கேசரி பத்திரிகைல அன்னிக்கு ருக்மா கேஸ்ல வந்த முதல் தீர்ப்பு பத்தி என்ன எழுதினாங்க தெரியுமா ?

**க.1** : என்ன ?

**க.2** : அந்த நீதிபதி பின்ஹேவுக்கும் ருக்மா வுக்கும் ஏதோ தொடர்பு இருக்குன்னு சந்தேகம் வர்ற மாதிரி எழுதினாங்க.

**மற்றொருவர்** : திலகர் சொல்றதை ஏத்துக்க முடியாது. சீர்திருத்தம் சட்டமா இப்பவே வந்தாதான் நல்லது. நல்ல சட்டங்கள் எந்த ஆட்சியில வந்தாலும் ஏத்துக்கணும்.

**க.1** : இவர் யார் ?

**க.2** : இவர் ரானடே. பெரிய சீர்திருத்தவாதி. இவர் ருக்மாவை ஆதரிச்சார்.

**குழு** : ஆனா ?

**க.1** : என்ன ஆனா ?

**குழு** : அவரே முதல் மனைவி செத்ததும்,

ஒரு சின்னப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிகிட்டார்.

**ரானடே** : எனக்கு ஒரு விதவையை மறுமணம் செய்யணும்னு தான் ஆசை. ஆனா என்னால எங்கப்பா பேச்சை மீறமுடியல. என்ன செய்யறது ? எனக்கு தாங்க முடியாத கோபம். அதனால், கல்யாணத்தன்னைக்கு கூட கோர்ட்டுக்கு லீவு போட மாட்டேன்னு சொல்லிட்டேன்.

**குழு** : ஆனா..

**க.2** : என்ன ஆனா ?

**குழு** : அவர் தான் கல்யாணம் பண்ணிகிட்ட பொண்ணுக்கு படிக்க சொல்லிக் கொடுத்தார்.

**ஒரு பெண்** : ஆமா. நான் நெறைய்ய படிச்சேன். பின்னால அவரோட செக்ரட்டரியா இருந்தேன். பெண்கள் மாநாடுகள் கூட்டி தலைமை தாங்கினேன். பண்டித ரமாபாயோட விதவை ஹாஸ்டலுக்கு நெறைய்ய ஹெல்ப் பண்ணேன்.

**க.1** : ம்ம். ஒரே குழப்பமா இருக்கே..

**க.2** : அதான் அப்பவே சொன்னனே, அந்த காலத்துல படிச்ச ஆண்களுக்குக் கொஞ் சம் குழப்பம் இருந்துதுன்னு.

**க.1** : பெண்களுக்கு ?

**க.2** : மாற்றம் வேணும்னு நெனைச்ச பெண்கள் உறுதியாதான் இருந்தாங்க.

**(ருக்மாபாயும் இன்னொரு பெண்ணும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.)**

**பெண்** : ருக்மா, நம்ம பெண்களை இந்த இங்கி

லீஷ் டாக்டர்கள் நடத்தற விதம் கேவலமா இருக்கு. சீககிரமே நமக்கு நெறைய்ய பெண் டாக்டர்கள் வேணும். ஆனந்திபாய் படிச்சு முடிச்சு வந்துடுவா. அடுத்து நீயும் வரணும். நான் லண்டனுக்கு உன்னைப் பத்தி எழுதியிருக்கேன்.

**ருக்மா** : நிச்சயமா. நான் விடாம படிச்சுகிட்டேதான் இருக்கேன். ஆனா இந்த கோர்ட் கேஸ்தான் என்ன இங்கயே முடக்கிப் போட்டிருக்கு.

**க.1** : இவங்க யாரு ?

**க.2** : அவங்க பெரிய புரட்சிக்காரின்னு சொல்லலாம். பண்டித ரமாபாய். 12 வயசுக்குள்ள நாப்பதாயிரம் ஸ்லோகங்கள் படிச்சு பண்டிதைன்னு பட்டம் வாங்கினவங்க. அவங்க அப்பா ரமாவுக்கும் ரமாவோட அம்மாவுக்கும் படிப்பு சொல்லித்தந்ததுக்காக, ஜாதியை விட்டு விலக்கி காட்டுக்கு துரத்திடாங்க. அப்பா, அம்மா செத்துப் போனதும், ரமாபாய், இந்தியா முழுக்க நடந்தே தன் அண்ணனோட சுத்தினாங்க. அண்ணனும் செத்து போனார்.அண்ணனோட நண்பரைக் கல்யாணம் பண்ணாங்க. அவரும் செத்துப் போயிட்டார்.அப்பறம்தான் ரமாபாய் பூனாவுக்கு வந்து விதவைகள் தங்கிப் படிக்க பள்ளிக்கூடம் ஆரம்பிச்சார். இவங்க முயற்சியினாலதான் பெண்கள் டாக்டர் படிப்பு படிக்க விக்டோரியா மகாராணி திட்டம் அறிவிச்சாங்க.

**ரமாபாய்**

**ருக்மாவிடம்** : கேசைப் பத்திக் கவலைப்படாதே. நாங்க எல்லாரும் உன்னோடதான் இருக்கோம்.

**குழு (சட்டென்று போய்)** : கவலைப்படாதே. நாங்கள்லாம் உன்னோட தான் இருக்கோம். இந்தா பணம்.

**(தாதாஜி பிக்காஜியிடம் பணம் தருகிறது குழு.)**

**க.** : எதுக்கு பணம் ?

**க.2** : ருக்மா கேஸ்ல தீர்ப்பை எதிர்த்து மேல அப்பீல் செய்யத்தான்.

**ஒரு குரல்** : சய்லேன்ஸ்.

**(நீதிமன்றம்.ருக்மாபாய் கூண்டில் நிற்கிறாள். இரண்டு நீதிபதிகள் உட்கார்ந்திருக்கிறார்கள். இன்னொரு பக்கம் தாதாஜி.)**

**ஒரு நீதிபதி** : உனக்கும் தாதாஜிக்கும் கல்யாணம் ஆனதை மறுக்கிறாயா?

**ருக்மா** : மறுக்கவில்லை. ஆனால் அது எனக்கு விவரம் தெரியாதபோது நடந்த கல்யாணம்.

**மற்றொரு நீதிபதி** : அந்த வயதில் உன் சார்பாக முடிவு எடுக்க வேண்டியவர்கள் பெற்றோர்கள்தான். அவர்கள் முடிவு எடுத்ததை தவறு என்று சொல்ல முடியாது.

**ருக்மா** : கல்யாணம் நடந்தது. ஆனால் சாந்தி முகூர்த்தம் நடக்கவில்லை.

**ஒரு நீதிபதி** : சாந்தி முகூர்த்தம் முடிந்தால்தான் கல்யாணம் நடந்ததாகக் கருதப்படுமா ? சாஸ்திரங்கள் என்ன சொல்கின்றன ?

**குழு** : சப்தபதி முடிஞ்சாப் போதும். தாலி கட்டினா போதும்.

**நீதிபதி** : அப்படியானால் உன் கணவன் வீட்டுக்கு

நீ போகவேண்டியதுதான்.

**ருக்மா** : அவருக்கு வீடே இல்லை. யார் வீட்டிலோ இருக்கிறார். அதுவும் மோசமான வீடு.

**குழு** : ராமன் இருக்கும் இடம்தான் அயோத்தி.

**ருக்மா** : அவர் படிப்பறிவில்லாதவர். மோசமான நடத்தையுள்ளவர். நான் படித்து மருத்து வராக விரும்புகிறேன். எங்களுக்குள் ஒத்து வராது.

**நீதிபதி** : உனக்கு அவரைப் பிடிக்கவில்லை என்பதற்காக விவாக ரத்து தர ஆங்கில சட்டத்தில் கூட இடம் இல்லை.

**குழு** : இந்து சாஸ்திரப்படி எந்த காரணத்துக் காகவும் விவாகரத்து தர இடமே இல்லை.

**நீதிபதிகள்** : சிவில் ப்ரொசீஜர் கோட் 260ம் பிரிவின்படி நீ உன் கணவனுடன் சென்று சேர்ந்து வாழும்படி உத்தரவிடுகிறோம்.

**ருக்மா** : போகாவிட்டால் ?

**குழு** : போகாவிட்டால் ?

**நீதிபதிகள்** : கணவனோடு போகாவிட்டால் ஜெயிலுக் குப் போகவேண்டும்.

**குழு** : ஆமா, கணவனோடு போ. இல்லாவிட்டால் ஜெயிலுக்குப் போ.

**ருக்மா** : இரண்டும் ஒன்றுதான். இல்லயில்ல. ஜெயிலே மேல். ஜெயில்ல படிக்க முடி யும் இல்ல?

**(ஒளி ருக்மா மீது மட்டுமாகக் குவிகிறது.)**

**ருக்மா** : எனக்குப் படிக்கணும். டாக்டராகணும். எனக்குப் படிக்கணும். டாக்டராகணும். நான் திரும்ப கல்யாணம் பண்ணமாட் டேன்.எனக்குப் படிக்கணும். எனக்குப் படிக்கணும். வேற ஒண்ணும் எனக்கு வேணாம்.

***(குழு சண்டைக்காரி பாடலைப் பாடுகிறது.)***

**க.1** : ருக்மாவுக்கு என்ன ஆச்சு?

**க.2** : ருக்மா தாதாஜியோட போய் வாழணும்கற கோர்ட் உத்தரவை நிறைவேத்தணும்னா, அவளை அரெஸ்ட் பண்ணியாகணும். அவ சொத்தை பறிமுதல் பண்ணனும். தாதாஜி ஒரு பெட்டிஷன் குடுத்தா போதும். ஆனா

**குழு** : பல எடங்கள்லயிருந்து ருக்மாவை அரெஸ்ட் பண்றதுக்கு எதிர்ப்பு வந்துது. ஸ்காட்லாந்துலருந்து பெண்கள்லாம் ருக்மாவை ஆதரிச்சு கடிதம் எழுதினாங்க. சென்னைலருந்து சாஸ்திரங்கள்லயும் நம்பிக்கை வெச்சுகிட்டு சீர்திருத்தமும் வேணும்னு சொல்லிகிட்டிருந்த ஒரு சீர்திருத்தக்காரர் ரகு நாத ராவ் என்ன சொன்னார் தெரியுமா?

**க.2** : என்ன?

**க.2** : தன் விருப்பத்துக்கு மாறான கல்யா ணத்தை ஏத்துக்க மறுக்கற ருக்மாவை சிறைக்கு அனுப்பினா, அது யேசுவை யூதர்கள் சிலுவைல அறைஞ்சதை விடவும் பெரிய அநீதியா இருக்கும்.

இந்தியாவில உள்ள கல்யாணமான சிறுமிகள் சார்பா பெரிய தியாகம் செய்யப் போறவளா ருக்மா இருக்கான்னு நெனைக்கறேன்னார்.

**க.1** : அப்பறம் என்ன ஆச்சு?

**க.2** : இங்கிலீஷ்காரங்களுக்கு தங்களோட சட்டத்தைத் திருத்தவும் மனசில்ல. இங்க இருக்கற சனாதனிகளை விரோதிச்சுக்கவும் விருப்பமில்ல. ருக்மா சிறைக்குப் போற மாதிரி ஆகிட்டாலும் கஷ்டம். அதனால ரெண்டு தரப்புலயும் தனியா சமரசப் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தவங்களை சிக்கிரமா ஒரு தீர்வுக்கு வாங்கன்னு தூண்டிவிடடாங்க.

**குழு** : தாதாஜிக்கு வேற கல்யாணம் பண்ணலாம்னு தோணிச்சு.

**குழு** : ருக்மாவுக்குப் படிக்க லண்டன் போக லேட்டாகுதேன்னு தவிப்பா இருந்துது.

**குழு** : ரெண்டாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு தரியா?

**ருக்மா** : ஓ.. குடுத்தா விட்டுடுவீங்களா ?

**குழு** : போய்த் தொலை.

**ருக்மா** : நான் டாக்டராகணும்.. நான் டாக்டரா கணும்...

**(ஒளி ருக்மா மீது மட்டும் குவிந்து அணைகிறது.)**

**க.1** : அவங்க படிச்சு டாக்டராகி, 91 வயசுல காலமாற வரைக்கும், குஜராத்ல டாக்டரா சேவை செஞ்சாங்க. நம்ம ஊர்லயும் இதே மாதிரி நான் டாக்டராகணும், நான் டாக்டராகணும்னு ஒரு பொண்ணு துடிச்சுது.

**க.1** : யாரது ?

**(குழு வகுப்பறையாக மாறுகிறது.)**

**ஆசிரியர்** : முத்துலட்சுமி..

**(வகுப்பறையில் ஒரே ஒரு பெண் மட்டும், நடுவில் திரை அபிநயிக்கப்படுகிறது.)**

**ஆசிரியர்** : ராமசாமி, சீனிவாசன், கோபாலரத்னம், கிருஷ்ணசாமி, சத்திய மூர்த்தி..

**(குழுவினர் ஒவ்வொருவராக யெஸ் சார் சொல்லிவிட்டு ஒரு பக்கம் வந்து உட்கார்கிறார்கள்.)**

**ஆசிரியர் கடைசியாக அழைக்கிறார்** : முத்துலட்சுமி.

**(இருவர் திரை பிடிக்க மறு பக்கம் முத்துலட்சுமி வந்து யெஸ் சார் சொல்கிறாள்.)**

**க.1** : என்ன இது ?

**க.2** : அப்ப,பெண்களுக்கு எஜுகேஷனே கஷ்டம். கோ எஜுகேஷன் நடக்குமா ? அதனால பாய்ஸ் கிளாஸ்ல முத்துலட்சுமி மட்டும் வந்து படிக்கறதுக்கு இப்பிடி ஒரு ஏற்பாடு. இதுக்கு புதுக்கோட்டை ராஜா சிபாரிசு செய்ய வேண்டியிருந்தது.

**க.1** : யார் இந்த முத்துலட்சுமி ?

**க.1** : இவங்க தேவதாசி குலத்ல வந்தவங்க. ஆனா, படிச்சு டாக்டர் ஆகணும்னு பிடிவாதமா இருந்தாங்க. தமிழ் நாட்டின் முதல் பெண் டாக்டர் இவங்கதான். இவங்க டாக்டரா மட்டும் இருக்கல. இன்னும் நெறைய்ய வேலை

செஞ்சிருக்காங்க. இந்திய மகளிர் சங்கத்தைத் தொடங்கினாங்க. ஓர்க்கிங் விமனுக்கு ஹாஸ்ட்டல் ஆரம்பிச்சாங்க. அவ்வை ஹோம், அடையாறு கேன்சர் ஹாஸ்பிடல் எல்லாம் இவங்க ஆரம்பிச்சதுதான்.

**க.2** : தேவதாசி கம்யூனிட்டின்னு சொன்னியே. எப்ப தேவதாசி சிஸ்ட்டம் ஒழிஞ்சுது ?

**க.1** : அதை ஒழிக்கவும் இவங்கதான் பாடுபட்டாங்க. சட்டசபைக்குப் பெண் களைத் தேர்ந்தெடுக்கலாம்கற நிலை வந்தபோது, முதல் பெண் சட்டமன்ற உறுப்பினரா இவங்களை நியமிச்சாங்க.

**(குழு முத்துலட்சுமியை பாராட்டுகிறது.)**

**குழு** : காந்திஜியைத் தனியா சந்திச்சுப் பேசினீங்களாமே? என்ன சொன்னார் ?

**முத்து** : தேவதாசி ஒழிப்பு மசோதா காப்பியை அவர்கிட்ட குடுத்தேன். இப்ப இதை எனக்குப் படிக்க நேரம் இல்ல. ஆனா இந்த விஷயத்துல உனக்கு என் முழு சப்போர்ட் உண்டு. என்னோட இந்தியா பத்திரிகைலயும் இதை ஆதரிச்சு எழுதறேன்னு சொன்னார்.

**குழு** : அப்ப, அவர் கட்சிக்காரங்க ஆதரவு கிடைக்கும் இல்ல?

**முத்து** : தெரியல. எப்பிடியும் என்னோட பழைய கிளாஸ்மேட் நிச்சயமா எதிர்ப்பார்.

**(குழு சட்டசபையாக மாறுகிறது.)**

**சபாநாயகர்** : தேவதாசி ஒழிப்பு மசோதா பத்தி அடுத்து மிஸ்டர் சத்தியமூர்த்தி ஐயர், நீங்க பேசலாம்.

**சத்தியமூர்த்தி** : தேவதாசிகளை ஒழிச்சுட்டா, நம்ம தேசத்துடைய பாரம்பரியமான நாட்டியமும் சங்கீதமும் அழிஞ்சு போயிடும். இத்தனை காலமா, அதை தேவதாசிகள்தான் காப்பாத்திகிட்டு வந்திருக்காங்க. இதுக்காக, பொட்டு கட்டிகிட்ட ஒவ்வொரு பெண்ணும் தான் தேவதாசிங்கறதுக்காக பெருமைப்படணும்.

**முத்துலட்சுமி** : கனம் உறுப்பினர் சொல்வதையெல்லாம் நான் ஏற்றுக் கொள்கிறேன். இந்த கௌரவமான பணியை இத்தனை காலமாக செய்து செய்து எங்கள் ஜாதியினர் அலுத்துப் போய் விட்டார்கள். இனிமேல் உறுப்பினருடைய ஜாதிக்காரர்கள் இந்த கௌரவத்தை ஏற்றுக் கொண்டு செய்வார்களானால் எனக்கு எந்த ஆட்சேபணையுமில்லை.

**(குழுவினர் மேஜைகளைத் தட்டி ஆரவாரம்.)**

*க 1* : ஸோ எல்லா பிராப்ளமும் தீர்ந்து போச்சு. தேவதாசி முறையை ஒழிச்சாச்சு. சைல்ட் மேரேஜ் அழிஞ்சுபோச்சு. ருக்மா மாதிரி நெறைய்ய பெண்கள் படிக்க வந்துட்டாங்க. நெறைய காலேஜ், ஸ்கூல் எல்லாம் தெறந்தாச்சு. பெண்களோட பிரச்சினைகள் எல்லாம் முடிஞ்சு போச்சு. நாடகத்தையும் முடிச்சுடலாம் இல்லியா ?

**க.2** : என்ன, நாடகத்தை முடிச்சுடலாமா? என்ன நாடகத்தை முடிச்சுடலாமா?

**(குழு தொடர்ந்து மௌனம்.)**

**க.2** : ஓ. நாடகம் இன்னும் முடியலைங்கறீங்களா ?

**(குழு தலையாட்டுகிறது.)**

**க.2** : எப்பிடி ?

**ஒருத்தி** : பெண்கள் பிரச்சினை எல்லாமே தீர்ந்துடுச்சா ?

**க.1** : யார் இவுங்க ?

**க.2** : இன்னொரு சண்டைக்காரின்னு நெனைக்கறேன்.

**குழு** : இவங்கதான் லீலாவதி. எங்க வார்ட் கவுன்சிலர்.

**க.2** : எந்த ஊர் நீங்க ?

**குழு** : மதுரை வில்லாபுரம்.

**(நகராட்சி கவுன்சில் கூட்டம் நடக்கிறது.)**

**மேயர்** : கவுன்சில் கூட்டம் இத்துடன் முடிகிறது.

**லீலாவதி** : நான் எழுப்பின பிரச்சினையைப் பத்தி எந்த பதிலுமே சொல்லல. அதுக்குள்ள எப்பிடி கூட்டத்தை முடிப்பீங்க ?

**மேயர்** : கூட்டம் முடிஞ்சுடுச்சு. நீங்கள்லாம் கலையலாம்.

**(கூட்டம் கலைகிறது. இரண்டு கட்டியக் காரிகளும் நிருபர்களாக லீலாவதியிடம் பேசுகிறார்கள்.)**

**க.1** : நீங்க எப்பிடி தேர்தல்ல நிந்தீங்க ?

**லீலாவதி** : இப்பதானே பஞ்சாயத்து நகராட்சிலலாம் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வந்துருக்கு. அதுக்கப்புறம் எங்க கட்சில என்னை நிக்க வெச்சாங்க.

**க.2** : சாப்பாட்டுக்கு என்ன செய்யறீங்க ?

**லீலாவதி** : நாங்க தறி போடறவங்க. எங்க வீட்டுல

எல்லாரும் தறி போடுவோம். நான், என் கணவர், என் முதல் ரெண்டு பொண்ணுங்க. கடைசி பொண்ணு கூட சொல்லிக் குடுத்தா போட ஆரம்பிச்சுடுவா.

***க.2*** : எப்பிடி நீங்க அரசியலுக்கு வந்தீங்க ?

**லீலாவதி** : என் கணவர் வாலிபர் சங்கத்துல இருந்தாரு. நானும் சேர்ந்தேன். அப்பறம் நெசவுத் தொழிலாளர் சங்கத்துல இருந்தேன். பிறகு மார்க்சிஸ்ட் கட்சில சேர்ந்தேன்.

***க.1*** : உங்க வார்டுல முக்கியமான பிரச்சினை என்ன ?

**லீலாவதி** : எங்க வார்டுல மட்டும் இல்ல, உங்களுக்கு, இவங்களுக்கு, எல்லா பெண்களுக்குமே குடி தண்ணீர் ஒரு முக்கியமான பிரச்சினை. வாங்க, எங்க வார்டுக்கு போய் பாக்கலாம்.

**(போகிறார்கள். காலிக் குடங்களுடன் பெண்கள் வரிசையாக நின்றுகொண்டு தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.)**

***க.1*** : பெண்கள் எவ்வளவு முன்னேறினாலும் இந்தக் குழாயடிச் சண்டையை விட மாட்டாங்க.

**லீலாவதி** : அவங்க ஏன் சண்டை போடறாங்கன்னு அவங்களையே கேளுங்களேன்.

**(ஒரு பெண்ணை கட்டியக்காரி கேட்கிறாள்.)**

**பெண்** : இன்னும் ஒரு மணி நேரத்துக்குள்ள அவருக்கு வேலைக்குப் போயாகணும்.

குழந்தைங்க பள்ளிக்கூடம் போகணும். நான் இங்கேயிருந்து தண்ணி எடுத்துகிட்டுப் போய்தான் சமையல் செய்யணும். தண்ணி கெடைக்காட்டா, எப்பிடியாவது சமாளிச்சு அவருக்கு மட்டுமாவது கைல ஏதாவது குடுத்து அனுப்பணும். உங்க கூட பேசிகிட்டிருந்தா, அங்க குடம் காணாம போயிடும்.

*(ஓடுகிறாள்.)*

**குரல்** : லாரி வந்துடுச்சு.

**(பரபரப்பு ஏற்படுகிறது. நான்கு ரவுடி கள் வருகிறார்கள். காசு கேட்டு வசூலிக்கிறார்கள்.)**

**க.1** : யார் இவங்க ? கார்ப்பரேஷன் ஸ்டாஃபா ?

**லீலாவதி** : லோக்கல் ரவுடிங்க. இவங்களுக்குக் காசு குடுக்காம தண்ணீர் எடுக்க விட மாட்டாங்க.

**க.2** : பைப்ல தண்ணி வராதா ?

**லீலாவதி** : பைப்பே போடல. அதுக்குதான் ரொம்ப நாளா கேட்டுகிட்டிருக்கோம்.

**(குழுவில் சிலருக்கு மட்டுமே தண்ணீர் கிடைக்கிறது. )**

**லீலாவதி** : ஏன் அவங்களுக்கு காசு தர்றீங்க ?

**குழு** : இல்லாட்டி தண்ணீர் கெடைக்காதே.

**லீலாவதி** : காசு குடுத்தா கூட இப்ப கெடைக்கல இல்லியா ? நமக்கு தண்ணி குடுக்க வேண்டியது கார்ப்பரேஷனோட கடமை. வாங்க. அங்க போய் மறியல் செய்யலாம்.

**(மறியல் நடக்கிறது.)**

*க1.* : தண்ணி வந்துடுச்சா ?

**லீலாவதி** : பைப் போட ஆரம்பிச்சுருக்கு. அதுலயும் காண்ட்ராக்ட் சிக்கல் இருக்கு. ஆனா, எப்பிடியும் பைப் போட்டுடுவாங்க. தண்ணி வந்துடும்.

**(லாரி வருகிறது. ரவுடிகள் வருகிறார்கள். பெண்கள், அவர்களிடம் காசு தர மறுக்கிறார்கள்.)**

**ஒரு பெண்** : இன்னும் கொஞ்ச நாள்தான் உங்க ஆட்டம். பைப்ல தண்ணி வந்துடும்.

**(குழு கலைகிறது.லீலாவதி தனியே நடந்து வருகிறாள்.ரவுடிகள் சூழ்ந்துகொண்டு தாக்கிவிட்டு ஓடுகிறார்கள்.லீலாவதி கீழே விழுந்து செத்துப் போகிறாள்.)**

**(குழு குடங்களுடன் வருகிறது.)**

**(சண்டைக்காரி பாடல் சோகமாகப் பாடப்படுகிறது.)**

**(கட்டியக்காரிகள் வருகிறார்கள்.)**

*க.1* : செத்துட்டாங்களா?

*க.2* : ஆமா. கொலை பண்ணிட்டாங்க.

*க.1* : அப்ப, சண்டை இன்னும் முடியல.

**குழு** : இல்லை இன்னும் முடியல. ஏராளமான சண்டை இன்னும் பாக்கி இருக்கு. சரிகா ஷாவை மறக்க முடியுமா ? சிதம்பரம் பத்மினியை மறக்க முடியுமா ?

**குழு** : நெறைய்ய சண்டை பாக்கி இருக்கு.

**குழு** : *வீட்டுக்குள்ள. வெளியில. எல்லா எடத்துலயும்.*

**க.1** : *ஆனா, சண்டைக்காரிங்க எங்கே ?*

**க.2** : *ஆமா, சண்டைக்காரிங்க எப்ப மறுபடியும் வருவாங்க ?*

**குழு** : *சண்டைக்காரிங்க எங்கே ? எப்ப வருவாங்க ?*

*(லீலாவதி எழுந்து உட்கார்ந்து சொல் கிறாள்.)*

**லீலாவதி** : *சண்டைக்காரிங்க வெளில எங்கேயி ருந்தும் வர மாட்டாங்க. அவங்க இங்கயேதான் இருக்காங்க.*

*(குழு ஒருவரையொருவர் பார்க்க ஆரம்பிக் கிறது.)*

**மெல்ல ஒருத்தி**

**மற்றொருத்தியிடம் :** *என் பேரு சண்டைக்காரி. உன் பேரு?*

**ஒவ்வொருவராக**

**மற்றவரிடம்** : *என் பேரு சண்டைக்காரி. உன் பேரு?*

**குழு**
**மொத்தமாகப்**
**பார்வையாளர்களிடம் :** *எங்க பேரு சண்டைக்காரி. உங்க பேரு?*

**(நாடகம் இப்போதைக்கு முடிவடைகிறது.)**